சாட்டையடித் தோலுரிப்பில்

கிழிந்து தொங்கும் முகமூடிகளும்

வாழ்க்கையின் நிதர்சனம்

சக்கையாகப் பிழிந்துபோட்ட

சுயங்களும் | பேயோன்



# சாட்டையடித் தோலுரிப்பில் கிழிந்து தொங்கும் முகமூடிகளும் வாழ்க்கையின் நிதர்சனம் சக்கையாகப் பிழிந்துபோட்ட சுயங்களும்

தேர்ந்தெடுக்கப்பட்ட நுண்பதிவுகளின் தொகுப்பு

பேயோன்

சாட்டையடி தோலுரிப்பில் கிழிந்து தொங்கும் முகமூடிகளும் வாழ்க்கையின் நிதர்சனம் சக்கையாகப் பிழிந்துபோட்ட சுயங்களும்

உரிமம்: பேயோன்

Creative Commons Attribution-NonCommercial-NoDerivatives 4.0 சர்வதேச உரிமத்தின் கீழ் பகிரப்படுகிறது.

முதல் மின்பதிப்பு டிசம்பர் 2013

அட்டை ஓவியம், வடிவமைப்பு: பேயோன்

Saattaiyadi Tholurippil Kizhindhu Thongum Mugamoodigalum Vaazhkkaiyin Nidharsanam Sakkaiyaakagap Pizhindhupotta Suyangalum

This work is licensed under a Creative Commons Attribution-NonCommercial-NoDerivatives 4.0 International License.

First electronic edition December 2013

Cover art and design: Payon



*மனித உளவியலின் அடிநாதஸ்வரத்தை எப்படியாய் ஊதுகிறார் ஏதாவது ஒரு ரஷ்ய எழுத்தாளர்!*

*

*2012க்கான என் மொழிநடையை நிர்ணயிக்க மீட்டிங். பதிப்பாளர்கள், மார்க்கெட்டிங், மக்கள்தொடர்பு, மொழி நிபுணர்கள் எல்லோரும் வந்திருக்கிறார்கள்.*

*

*என் பெயரில் இலக்கிய விருது தொடங்கிக்கொண்டால் தன்னடக்கமாக இருக்காது. எனவே என் படைப்பின் பெயரில் ஒன்று:- 3024இல் எதுவும் சாத்தியம் விருது. மனம் திருந்திய மன்னன் விருதுகூட நன்றாகவே இருக்கிறது. அல்லது சைக்கிளைத் திருடியவன் விருது இன்னும் கௌரவமாக இருக்குமா?*

*

"சகதர்மிணி" என்பதைவிட "பழக்கதோஷிணி" என்பது பொருத்தமானதாய் தோன்றுகிறது.

*

காபியில் சர்க்கரை பட்டால் வெடித்துவிடும் என்று என் இல்லத்தரசினியிடம் யாரோ ஹோம் சயின்ஸ் விஞ்ஞானி சொல்லிவிட்டிருக்கிறார் போலும்.

*

இன்னும் பதினைந்து நாட்களுக்கு பக்கத்துக் கோவிலில் மாருகோ மாருகோ மாருகழிதான்.

*

நெடுநாள் பார்க்காத நண்பனிடம் எழுத்தாளனானதை சொன்னேன். "இன்னா எய்துவே?" என்றான். "இயற்கை எய்துவேன்" என்றேன், Death of the Authorஐ விளக்கி.

*

வாசகர்களின் புத்தாண்டு வாழ்த்துகளுக்கு நான் அடிமை.

*

நான் வேறு, புத்தாண்டு வாழ்த்துகள் வேறு அல்ல.

*

சாலையில் யாரோ என் பெயர் சொல்லி அழைக்கிறார்கள். திரும்பிப் பார்த்தால் புத்தாண்டு

வாழ்த்துகள்.

*

என் படைப்புகளை மட்டுமே படித்துப் பழகிவிட்டேனா, வேறு யாருடையதாவது படித்தால் உடனே "அடடே, இப்படியெல்லாம் வராதே?" என்றுதான் தோன்றுகிறது.

*

சண்டை என வந்துவிட்டால் தார்மிகம் பார்க்க தயங்குகிறது மனம். இந்த ஒருமுறையாவது எழுதப்படாத விதிகளை தளர்த்தக்கூடாதா என்று ஏங்கவும் செய்கிறது.

*

ஒவ்வொருத்தன் எழுதுவதை பார்த்தால் நானே பரவாயில்லை போலிருக்கிறது.

*

பழைய நூறு ரூபாய் நோட்டை தொன்னூறு ரூபாய் நோட்டு என்று சொல்வதில் தவறில்லை.

*

மகன் எழுதியுள்ள கவிதை:- இரு நெஞ்சங்களின் / உராய்சலில் பிறந்த / காட்டுத்தீ நம் காதலாகும்.

*

@borehay உங்கள் படைப்புகளில் "ஆன்டி-செமிட்டிக்"

ஏதாவது உண்டா? என் பார்வையில் எதுவும் தட்டுப்படவில்லை, அதனால்தான் கேட்கிறேன்.

*

கைகளுக்கு மோட்டார் மாற்ற இன்றிரவு டோக்கியோ செல்கிறேன்.

*

இன்றைய அழையா விருந்தாளி, திரவ வடிவில் மேலிருந்து கீழே. #மழை

*

நானும் வாங்கியிருக்கிறேன் என்று சொல்லிக்கொள்ளவாவது எனக்கு நோபல் பரிசு கிடைக்கட்டுமே.

*

முதலில் நான் வாசகன். எனவே எனது நூல்களிரண்டு வெளியானதைவிட எனக்கு புதிதாக இரு புத்தகங்கள் படிக்கக் கிடைத்ததில் அதிக மகிழ்ச்சி.

*

இலக்கியம் சோறு போடுகிறதோ இல்லையோ, சோறு இலக்கியத்தைப் போட்டுக்கொண்டிருக்கிறது.

*

ஒரே சமயத்தில் இரு புத்தகங்களை வெளியிடுவதிலுள்ள நன்மை:- எப்படியும் ஒன்றைவிட இன்னொன்று சுமாராகவாவது இருந்துதான் ஆக வேண்டும்.

*

சொர்க்கத்தை எப்போதுமே ஒருவித நூலகமாகத்தான் கற்பனை செய்து பார்த்திருக்கிறேன் - போர்ஹே
#அங்கன அழகா நர்ஸுங்க இருப்பாங்களா சார்?
#ட்விட்டர்

*

பத்து வார்த்தைகள் பொடி வைத்து எழுதினால் அதில் நான்கிற்குத்தான் தும்முகிறார்கள். #புள்ளிவிவரம்

*



வெகுஜன கவிதை வெளியின் ஆண்-டாள் தபூ சங்கர்.

*

இயற்கை அண்ணை நம்மை எதற்கோ தயார் செய்துகொண்டிருக்கிறார்.

*

Vanilla Sky என்ற படத்தை பார்க்கும்போது 'ஆகாய வெண்ணிலாவே' பாடல் நினைவுக்கு வருகிறது.

*

அர்த்தம் என்பது வார்த்தைகளின் அழகை மறைக்க எழுத்தாளன் அனுமதிக்கக் கூடாது.

*

வார்த்தைகள் மாதிரி வராது.

*

நிறைய தட்டச்சு செய்து விசைப்பலகை சேதமாவதால் தினமும் காலையில் பேப்பர் போடுவது போல் விசைப்பலகையும் தினமும் ஒன்றாக போடச் சொல்லிவிட்டேன்.

*



தற்போது நான் படித்துக்கொண்டிருக்கும் ஆங்கில நாவலில் ஏகப்பட்ட முத்தக் காட்சிகள்.

*

என் 'காதல் இரவு' கவிதை தொகுப்பிற்கு எதிர்பார்த்தது போல் முதல் விமர்சனம்:- "இரவல் வாங்கினேன், இன்னும் விடியவேயில்லை".

*

நாளை உலக அழிவு! இன்றே கடைசி! எல்லாம் பாதி விலை! #சிறுகதை

*

70களின் முன்பு நாம் ஒன்றுமே இல்லை.

*

என்னை யாராவது விமர்சித்தால் நியாயம் கருதாமல் விழுந்தடித்துக்கொண்டு எனக்கு வக்காலத்து வாங்க வரும் ரசிகர்கள் அமையும்வரை நான் எழுத்தாளன் அல்ல.

*

என்னைப் பொறுத்தவரை, என்னைப் பொறுத்தவரை என்று பூடகமாக எழுதுகிறார்கள். என்னைப் பொறுத்தவர் யாரய்யா என்று கேட்டால் பதிலைக் காணோம்.

*

சில சமயம் நம் அருமை நமக்கே தெரியாது. அம்மாதிரி தருணங்களில் நாம்தான் "என் அருமை எப்படி?" என மற்றவர்களிடம் கேட்டு தெரிந்துகொள்ள வேண்டும்.

*

இன்று பெர்லின் பஸ் ஸ்டாண்டில் திடீரென ஐம்பது பேர் குழுமி எனது "இன்றைய செய்தித்தாள்" படைப்பை சத்தமாக வாசித்தார்களாம். இந்த "flash mob"கள்!

*

ஐயாக்களா, இந்த 'நிமித்தம்' என்கிற வார்த்தையை எப்படி பயன்படுத்துவதாம்? ஒரு வாரம் கவிதை படிக்காமல் இருந்ததில் புதிய போக்கை தவறவிட்டுவிட்டேன்.

*

தெருவில் ஒரு பெண்ணை பார்த்தேன். என்ன அழகு என வியக்கையில் தன் அழகிற்கு தொடர்பே இன்றி கடுக்கு முடுக்கு என தெலுங்கில் பேச துவங்கிவிட்டாள்.

*

கர்நாடக பா.ஜ.க. அமைச்சர்கள் சட்டமன்ற அவையில் ஆபாசப் படம் பார்த்தார்கள் - செய்தி
#அகன்ற_ஹிந்து_ஸ்தனம்

*

சாகும் வரை "awkward age"தான்.

*

அவர் இறந்துவிட்டார் என்பதற்காக சொல்லவில்லை, ஆனால் பாரதியார் நிஜமாகவே நல்ல எழுத்தாளர்.

*

கிரீஸ்... எப்படி இருந்த நாடு! எவ்வளவு நல்ல படம்!

*

எனக்கு இன்றைய நான்காவது காபி வேண்டும் என்று வெளிப்படையாக கேட்டுவிடுவது அனாவசிய விமர்சனங்களை தவிர்க்கும்.

*

Well endowed ---> சாமானியன் ---> Lincoln
#லபக்குதாஸ் #மொழியாக்கம்

*

நிறைய படைப்புகள் எழுதிக் குவித்துக்கொண்டு அதில் நான்கைந்து மட்டுமே நன்றாக அமையும்படி பார்த்துக்கொள்வது ஒரு எழுத்து உத்தி.

*

எனது நனவிலி செய்யும் எதுவும் கனவிலிக்கு ஏற்புடையதாக இல்லை.

*

ஆச்சரியம். 18ஆம் நூற்றாண்டில் யாரோ ஜப்பானை படையெடுத்திருக்கிறார்கள். யப்பான் என்று பெயரை மட்டும் மாற்றிவிட்டு திரும்பி சென்றிருக்கிறார்கள்.

*

விளம்பரப் பிரியராக இருந்தால்தான் டிவி பார்க்க முடியும் போல. அவ்வளவு விளம்பரங்கள்.

*

மனையாள் எப்போதும் வீட்டுவேலைகளில் மூழ்கிக் கிடக்கிறார். அவருக்கென ஒரு வாழ்க்கை இல்லை. எனக்கோ வருத்தப்படாதிருக்க மன சு வர மாட்டேன் என்கிறது.

*

பெரிய பாத்திரத்தில் பாப்கார்ன் வைத்துத் தின்றபடி கலிபோர்னிய சினிமா பார்க்கிறேன். சண்டைக் காட்சிகளின்போது மிகவேகமாக அரைபடுகிறது பாப்கார்ன்.

*

நண்பர்கள் புதிதாக யாராவது எழுத்தாளரை அறிமுகப்படுத்தினால் அவர் எதற்கு சொந்தக்காரர் என்று கேட்டுவிடுவது.

*

நல்ல சினிமாக்களை பார்ப்பதில் நீண்டகால பழக்கம்

ஏற்பட்டுவிட்டது. இப்போது என்னால் ஒரு அறையின் எந்த மூலையிலிருந்தும் சினிமா பார்க்க முடியும்.

*

சமீபத்தில் எழுதிய திரைப்பட பாடல் வரி:- வானில் எனக்கொரு இடம் வேண்டும், காணி நீலம் வேண்டும்.

*

பலர் ஃபேஸ்புக் புரபைல் படங்களில் மனைவியுடன் இழைந்துகொண்டு தோற்றமளிப்பதன் ரகசியம் என்ன? இந்த ஆண்கள் நிஜமாகவே சந்தோசமாகவா இருக்கிறார்கள்?

*

நல்ல கவிதை என்பது சைலன்சர் பொருத்திய வெடிகுண்டு போல் இருக்க வேண்டும்.

*

வெள்ளைக்காரனுக்குத்தான் படம் போட வருகிறது.

*

அனைவருக்கும் உலக சிறுநீரக தின வாழ்த்துகள்.
#மார்ச்8

*

இன்று சிலர் ஹோலி கொண்டாடுவது போல இங்கு

மகளிர் தினம் என ஒன்று கொண்டாடுகிறார்கள். இரண்டுமே நமது பண்பாட்டிற்கு சம்பந்தம் இல்லாத இரண்டு.

*

அடிப்படையில் நம்முடையது ஆண் மையம் சார்ந்த பண்பாடு. மகளிர் தினம் கொண்டாடுவதெல்லாம் பண்பாட்டை மறக்கவைக்கும் ஏற்பாடுகள்.

*

மகளிர் தினம் என்றால் மட்டும் ஆண்களுக்கென்ன விசேச மரியாதையா கிடைத்துவிடப்போகிறது? இன்றைக்கும் அதே மண்டகப்படிதான். #மார்ச்8

*

ஒரு மகிழ்ச்சியை அடைவதில் உள்ள சந்தோஷம், அந்த மகிழ்ச்சியை தொடர்ந்து அடைவதால் நீட்டிப்பு பெறுகிறது.

*

உலக சிறுநீரகம் என்பதே கட்டுக்கதை. நாமெல்லோரும் ஒரே சிறுநீரகத்தையா பயன்படுத்துகிறோம்? தனித்தனியாக இரண்டிரண்டு வைத்திருக்கிறோமே. #உலகசிறுநீரகதினம்

*

ஒப்பிட்டு திட்டப்படுவதற்கு வெறுமனே திட்டப்படுவது

எவ்வளவோ பரவாயில்லை.

*

சொந்த கீதை:- எதை எழுதினேனோ அது நன்றாக இருக்கிறது. எதை எழுதப்போகிறேனோ அதுவும் நன்றாகவே இருக்கும்.

*

சமகால சூரியன்கள் தாங்கள் பிரதிபலிக்கும் தண்ணீர் பானைகளை இன்னும் கவனமாக தேர்ந்தெடுக்க வேண்டும்.

*

அடிப்படையில் நாம் பீர்பாலிஸ்டுகள். நம்மால் ஒருவரை சிறிதாக்காமல் இன்னொருவரை பெரிதாக்கமுடியாது. நம் அக குழந்தையை பீர்பால் வெளிக்கொணர்கிறார்.

*

நண்பர்களிடம் எச்சரிக்கையாக இரு. எதிரிகளிடம் இன்னும் எச்சரிக்கையாக இரு.

*

கரகாட்டக்காரன் படுசிறப்பு. படத்திற்காகவே பாடல்களை மீண்டும் கேட்கலாம். நமக்கு ஏற்புடைய திரையுலக பிரமுகர் ராஜாதான் இசை என்பது கூடுதல் தகவல்.

*

#Nowlistening ஆம் தேனே, நான் ஷெரீப்பை சுட்டுவிட்டேன்

*

இலக்கியத்தையும் வெறும் தகவல்பகிர்வையும் பிரிக்கும் கோடு எத்தனை மிமீ என யாராவது சொன்னால் என் கட்டுரையில் சேர்க்க வசதியாக இருக்கும், நன்றி.

*

வாழ்வதையும் சிரிப்பதையும் தனித்தனியாகத்தான் செய்ய முடிகிறது.

*

வீட்டில் மிக்ஸி இயங்கவில்லை. மாவு மில் போகிறேன். அங்கு 10 நிமிடம் இருப்பேன். சந்திக்க விரும்பும் அன்பர்கள் மின்னஞ்சலில் தொடர்புகொள்ளவும்.

*

கிராமங்களூடே நீண்ட, அலுப்பூட்டும் பயணம். Country road take me home என்றாகிவிட்டது.

*

ஒரு அளவுக்கு மேல் சிந்தித்தால் என்னென்னவோ தோன்றுகிறது.

*

இந்த மின்வெட்டில் அப்படி என்னதான் இருக்கிறதோ, தினமும் சில மணிநேரம் அதில் போய்விடுகிறது.

*

சிலர் புகழுமளவு மோசமாகவா எழுதுகிறேன்?

*

பாடல்காரப் பெரியவர் ராஜாசாரின் 'தளபதி' பாடல்கள் கேட்கிறேன். 'ராக்கம்மா'வில் நம் நாடி நரம்புகளையெல்லாம் வயலின் கம்பிகளாய் மீட்டுகிறாரிவர்!

*

#Nowlistening செந்தாழம்பூவில் வந்தாடும் தென்றல் - இங்கு பாடல் பெறும் தென்றல், திரையிசை திறமைசாலி ராஜாசாரின் இசைக்குத்தான் குறியீடோ?

*

#Nowlistening இசைப்பிரியர் இளையராஜாவின் 'மௌனராகம்' பாடல்கள். இத்தனை ஆண்டுகளுக்கு பிறகும் எந்த முன்னேற்றமும் இல்லை.

*

எந்தப் பொய்யும் தன்னளவில் உண்மையானது.

*

*எவன் எவனோ வெளிநாடு போகிறான். நான் என்ன செய்துகொண்டிருக்கிறேன்? சென்றாண்டு ஏப்ரல் மாத வெயிலுடன் இந்தாண்டு ஏப்ரல் மாத வெயிலை ஒப்பிடுகிறேன்.*

*

*"டேய், நிமிர்ந்து ஒக்காரு!" ஏதோ என்னாலான குழந்தை வளர்ப்பு.*

*

*மகனுடன் மனைவி தாய்வீடு பயணம். பாஷோ கவிதை நினைவுகூரல்:-*

When you go to evil place
I do my enjoy
Hurried blooms the sakura.

*

*தமிழ்நாட்டில்தான் ஹிந்து மறுமலர்ச்சி வேகவில்லையே. அப்புறம் எதற்கு சட்டமன்றத்தில் கைபேசி தடை?*

*

*யாருக்கும் துணிந்து கெடுதல் நினைக்க முடியவில்லை. எல்லோருக்கும் குழந்தை இருக்கிறது.*

*

*சின்னதம்பி:- இசை ஆர்வலர் ராஜாவின் ஒவ்வொரு*

பாடலும் ஒரு தினுசு. இசையில் மேலோட்டமான ஆர்வமாவது இருந்தால்தான் இப்படி நல்ல பாட்டு போடமுடியும்.

*

எல்லா எழுத்தாளர்களும் மோசமான எழுத்தாளர்கள் அல்லர். ஆனால் எல்லா மோசமான எழுத்தாளர்களும் எழுத்தாளர்களே.

*

மிக நெகிழ்ச்சியாக ஏதாவது எழுதுவதாக இருந்தால் எல்லா கதவுகளையும் சாத்திவிடுகிறேன். அப்படியும் என் சிரிப்பு சத்தம் எனக்கே இடைஞ்சலாக இருக்கிறது.

*

வாசகர் கடிதம்:- "அன்பின் சார், நீங்கள் மட்டும் எப்படி இவ்வளவு நன்றாக எழுதுகிறீர்கள்? ஏதாவது வேண்டுதலா?"

*

நல்லவனை இகழ்ந்து அழி, கெட்டவனைப் புகழ்ந்து அழி. #சுயமொழி

*

சமூகம் கெட்டுப் போய்விட்டதாடா/சரி/ஃபேஸ்புக் லைக்குகள் போடலாம்/வாடா

*

வாழ்க்கை என்பதே ஒரு மோசமான அனுபவம்.
#கொளுத்திப்போடு

*

'கிழவன்' என்பதைவிட 'வயோதிக மனிதன்' என்றால் மெர்சலாக இருக்கிறது.

*

எனது புத்தகங்களுக்கு மதிப்புரைகளைவிட முன்னுரைகளே அதிகம் கிடைத்துள்ளன.

*

என்னை பார்க்க வருபவர்கள் கவிதை தொகுப்பு தருகிறார்களே தவிர தின்பதற்கு எதுவும் வாங்கிவருவதில்லை. கூச்சம் கருதாமல் கேட்டால் சிரிக்கிறார்கள்.

*

கெட்டது செய்ய ஆயிரம் பேர் இருக்கிறார்கள். நல்லது செய்யத்தான் ஆளில்லை.... மாற்றிச் சொல்கிறேனோ?

*

ரொமிலா தாப்பரை ஐநூறு பக்கம் படித்துவிட்டுத்தான் சிறுகதை எழுத வேண்டும் என்றால் நடக்கிற கதையா?
#போய்யா

*

சமவயது எழுத்தாளர்களுக்கு மட்டும் வாசகிகள் நிறைந்திருக்க எனக்கு மட்டும் ஏன் இல்லை? எங்கே எனது ரசனைக்காரிகள்?

*

மனைவி என்னிடம் கொஞ்சம் சிரித்துப் பேசினாலும் காபி கேட்டுவிடுகிறேன்.

*

வாரிசு சமையலறையில் எதையோ எடுக்கப் போய் காபி டிகாஷனை கொட்டிவிட்டான். 'சமையலறையில் ஆண்பிள்ளைக்கு என்னடா வேலை?' என காட்டமாக திட்டிவிட்டேன்.

*

நான் தனித்துவமானவன். என் ஃபேஸ்புக் சுவரில் மாற்றார் கவிதை மேகங்கள் மழை பொழிந்து செல்வதில்லை.

*

தாராபுரம் ஸ்ரீநிவாசன் இப்போதெல்லாம் எழுதுவதில்லையா?

*

பாத்ரூமில் ஒரு கரப்பான் கூட்டத்தை அழித்தேன். "இது

உயிரினங்களிடையிலான உயிர்பிழைப்பு யுத்தம். நத்திங் பர்சனல்" என்றேன் கடைசி கரப்பானிடம்.

*

"இங்கே நீ குடும்பத் தலைவனா நான் குடும்பத் தலைவனா?" எனக் கேட்டது வம்பாகிப்போய் "தகவலுக்குத்தான் கேட்டேன்" என்று சமாளிக்க வேண்டியதாயிற்று.

*

காலையிலிருந்து 14-இட்லி, வெங்காய வடை, காபி என வரிசையாக தந்து ஜமாய்க்கிறார் மனைவி. வாழ்க்கையை கொண்டாட பெண்களுக்கு கற்றுத்தர வேண்டுமா என்ன?!

*

மனித வாழ்க்கையில் மரணம் என்பதே இல்லாவிட்டால் எனக்கு இன்னும் நிறைய வாசகர்கள் இருப்பார்கள்.

*

கண்ணாடியில் என்னையே நான் பார்க்கிறேன்.

*

என்ன வெக்கை! நாசமாய்ப்போன வறட்டு சுற்றுச்சூழல் அக்கறைக்காக ஏசியைப் பயன்படுத்த முடியாத இழவெடுப்பிலிருந்து என்றைக்குத்தான் விடிவுகாலமோ!

*

'பாபு' என்று பெயர் இருந்தும் கதாநாயக பதவி கிடைப்பது தெலுங்கு சினிமாவில்தான் சாத்தியம்.

*

நம் லட்சியமே நமக்குத் தடையாகிவிடக் கூடாது.

*

ஞாயிறு காலை எட்டு மணிக்கு கலாச்சார சீரழிவு. இன்னும் மூன்றாண்டுகளில் நம்மூர் பெண்கள் நைட்டியிலேயே வெளிநாடு பயணம் போவார்கள்.

*

அநாமதேய பொன்மொழி எழுத்தாளர்கள் கடைசி வரை யாரோ.

*

'சரி, இருக்கட்டும் விடு. உனக்கு மாமியார் என்றால் எனக்கும் மாமியார்தானே' #சமாதான_யத்தனம்

*

அகலிகை கதைக்காக ஒரு தகவல் தேவை. திருமணத்திற்குப் பின் கணவனும் மனைவியும் ஒரே கோத்திரம் என்பதால் தாலியிலிருந்தே ராக்கி வந்தது என நிறுவலாமா?

*

Rain = *நீர்வீழ்ச்சி* #மொழியாக்கம் #லபக்குதாஸ்

*

இந்தாண்டின் திசை காட்டிப் பறவை விருதை தவறுதலாக எனக்கே அளிக்கவிருந்தார்கள். நான்தான் ஒரு புன்னகையுடன் மனமில்லாமல் தவறை சுட்டிக்காட்டினேன்.

*

நெகிழ்கிற மாட்டை நெகிழ்த்திக் கறக்கணும்.

*

கட்டுரையாகவோ கதையாகவோ நீட்டி முழக்கிக்கொண்டிருப்பதைவிட மடக்கிப்போட்டு முத்தாய்ப்பு வைத்து கவிதையாக்கிவிடுவதே சாலச் சிறந்தது என்று படுகிறது.

*

என் புத்தகங்களை சின்னஞ்சில பேர்களே வாங்குவதால், படித்தும் பிடிக்காதவர்கள் என்னை அம்பலப்படுத்துமுன் சற்று யோசிக்க வேண்டுமாய் விரும்புகிறேன்.

*

தொடர்ந்து ஒரே மாதிரி எழுதுகிறேன் என்று என் மீது ஒரு விமர்சனம். தொடர்ந்து ஒரே மாதிரி

எழுதினால்தானே ஐயா அது என் மாதிரி ஆகும்!

*

இந்த ஆண்டாவது அமெரிக்கா வெளிநாட்டவனாகிய என்னை விதிவிலக்காக கருதி ஜானி விருதை அளிக்குமா? மிகப்பொதுவான இந்த பெயரில் ஒரு விருதாவது இருக்குமே?

*

ஃபேஸ்புக்கைப் பயன்படுத்தும்போதுதான் உலகில் இத்தனை பேர் இருப்பது உறைக்கிறது.

*

பல தமிழ் வார்த்தைகள் கன்னடத்தில் ஆச்சரியகரமாக உருமாறியுள்ளன. வெண்பாவை கன்னடத்தில் 'பெண்ஹா' என்கிறார்கள்.

*

வாரயிறுதியில் ஹிட்லரின் 'எனது போராட்டம்' படித்தேன். விவஸ்தை இல்லாத எழுத்து!

*

நேற்று 42 டிகிரி பயங்கர வெக்கை. இன்று கிடுகிடு என்று இறங்கி 41க்கு வந்துவிட்டது. போர்த்திக்கொண்டிருக்கிறேன்.

*

கடற்கரைக்குச் சென்று வந்த பின் வாரிசு எழுதிய கவிதை: இதென்ன கடலா, மழையா/இவ்வளவு தண்ணீர்?!

*

ஒரு கதாபாத்திரத்தின் எண்ணவோட்டத்தை வர்ணித்த பின், 'என் கதாபாத்திரம் என்பதால் எனக்கு இதெல்லாம் தெரிகிறது' என மறுப்பு போட்டுக்கொள்ளலாமா?

*

"நான் கிறுக்கியது" என ஒரு அன்பர் என்னிடம் கவிதை தொகுப்பு தந்தார். உடனே கிழித்துப்போட்டு "இனி கிறுக்கிவிட்டோமே என வருந்தாதீர்கள்" என்றேன்.

*

திரைப் பாடலுக்காக எழுதிய வரிகள்:- டெலிகாம் கீபோர்ட் உன் கண்கள், டிஜிட்டல் ஐபோன் உன் கன்னம்...

*

ராஜா, மணி ஆகிய இருபெரும் சார்களுக்கு இன்று பிறந்தநாள். 1937ல் 'மைனர் ராஜாமணி' என்ற படம் வந்துள்ளது. ஆனால் இவர்கள் இருவரும் மேஜர் ஆளுமைகள்.

*

உறவுகள்... எவ்வளவு உருக்கமான விசயம்!

*

டேக் முடிந்த பின்னும் / விடாமல் அழுகிறான் நடிகன் / எல்லாம் ஒரு விளம்பரந்தான். #ட்விட்டர்கவிதை

*

தமிழ் இலக்கியத்தில் cute overload கவிதை இயக்கம் சரியாக எந்த ஆண்டில் தொடங்கியது என்று சொல்ல முடியுமா?

*

சாட்டையடி தோலுரிப்பில் கிழிந்து தொங்கும் முகமூடிகளும் வாழ்க்கையின் நிதர்சனம் சக்கையாகப் பிழிந்துபோட்ட சுயங்களும். #தலைப்பு

*

திருக்குறள் எழுதப்பட்டு 2000 ஆண்டுகளுக்குமேல் ஆவதாக சொல்கிறார்கள். அவ்வளவு தூரம் ஏன்? போன வாரம்கூட மணிமேகலை மறுபிரசுரம் போட்டிருக்கிறான்.

*

விரும்பாத போன் அழைப்புகளை தவிர்க்க 45,000 ரூபாய் கொடுத்து ஒரு பைக் வாங்கி வீட்டுக்குள் பூட்டிவைக்கலாமா என யோசனை. "டிரைவிங்ல இருக்கேன்."

*

ஒரு நண்பரின் மகள் அப்படியே அவர் சாயலில் இருக்கிறாள். ஆணாதிக்கம் எவ்வளவு நுட்பமான வழிகளில் வெளிப்படுகிறது பாருங்கள்!

*

உனக்கும் எனக்குமான பந்தத்தைப் பற்றவைக்கிறது வி'தீ'. #ட்விட்டர்

*

தெரிந்தவர் ஒருவருக்கு இன்று திருமணம். நாளையிலிருந்து அவருக்கு எப்படி இருக்குமோ.

*

தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும். தர்மம் மறுபடி வெல்லும். மறுபடியும் தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும். ஆனால் மறுபடியும் தர்மம் வெல்லும்.

*

வயது ஆக ஆக வாழ்க்கை மீதான அவநம்பிக்கை அதிகரித்து சிரிப்பு வருகிறது.

*

நடிகையான ஃபெடரிகோ ஃபெலினியின் மனைவி கொடுத்துவைத்தவர். கணவர் தேர்ந்த இயக்குநர்.

*

உலகில் எத்தனை விஷயங்கள் குறிப்பிடத்தக்கவை என்று ஆய்வு செய்பவர்கள் தமிழ் செய்தித்தாள்களை தொடர்ந்து படிக்க வேண்டும்.

*

இரு கணினிகளில் இருகைகளால் இருவேறு நாவல்களை தட்டச்சு செய்கிறேன். மூன்றாவதாக ஒன்றை டிக்டேட் செய்கிறேன். மாலைக்குள் தரவேண்டும். சிரமமாக உள்ளது.

*

என் எழுத்தின் மூலம் உலகிற்கு நான் ஒரு செய்தி சொல்ல விரும்புகிறேன். "நான் கொஞ்சம் கிரியேட்டிவ் டைப்" என்பதே அச்செய்தி.

*

@borehay சரியான சாட்டையடி தோழர்! இனிமேலாவது திருந்துவார்களா?

*

நிறைய மொழிபெயர்ப்புக் கவிதைகளைப் படித்துவிட்டு நானும் சில மொழிபெயர்ப்புக் கவிதைகளை எழுதத் திட்டம்.

*

குழந்தைகளுக்காக எழுதும்போது குழந்தைகளாகவே மாறிவிடுகிறேன்.

*

வெகுஜன எழுத்து, இலக்கிய எழுத்து என பிரிக்காமல் முறையே தற்காலிக இலக்கியம், நிரந்தர இலக்கியம் என பிரித்தால் ஆதங்கம் குறையும் போல.

*

வாழ்க்கை அதன் ஆயுள் முழுவதும் பயனற்ற பொன்மொழிகளைத் தோற்றுவித்துக்கொண்டே இருக்கிறது.

*

சோவியத் ருஷ்யாவில்/நீ என்னைக் காதலிக்கிறாய்.
#ட்விட்டர்கவிதை

*

தமிழ்க் கவிதைக்கு பதிலாக யாராவது இளம் அரசியல்வாதி சாகலாமே?

*

வாழ்க்கை இனிமையாக இல்லை என்றால் ஆத்திரம் ஆத்திரமாக வருகிறது.

*

நான் உண்மையைத் தேடிய வயதில் மகன் ரிமோட்டைத் தேடிக்கொண்டிருக்கிறான்.

*

Autoeroticism <---> சுயம்புலிங்கம்: தொடர்பு உண்டுதானே?

*

நமக்கொரு நியாயம், மற்றவனுக்கொரு நியாயம் என்பதில் சூது இருக்கிறது.

*

எனது 27,000 பக்க நாவலான 'நீ!' நாளை வெளியாகிறது. 5,000 பிரதிகள் மட்டுமே அச்சிடப்பட்டுள்ளன. பார்க்கிங் வசதி உள்ளவர்களுக்கு முன்னுரிமை.

*

ஒரு கவிதைத் தொகுப்புக்கு "என்னைக் கேட்டால் இதெல்லாம் தேவையே இல்லை" என ஒருவரி மதிப்புரை எழுதிக் கொடுத்தேன். வெளியிட மறுத்துவிட்டார்கள்.

*

ஒரே வெறுப்பாக இருக்கிறது. யாராவது பத்து கோடி கொடுங்கள். எங்கேயாவது போய்விடுகிறேன்.

*

ஆண்களே, பெண்களை மதிக்கக் கற்றுக்கொள்ளுங்கள். உங்கள் ஆதிக்க அனுதாபம் அவர்களுக்குத் தேவையில்லை. பாவம் அவர்களை விட்டுவிடுங்கள்.

*

குறைவான பிழைகளோடு எழுத வந்தாலே கன்னத்தில் பேனாவைச் சாய்த்துவைத்துக்கொண்டு படைப்பாளி வேடம் போடுகிறார்கள்.

*

கருக் குழந்தைகள் பெண்ணாக உருவாகின்றன. சில குழந்தைகள் அப்படியே பிறந்துவிட, சில, வயிற்றிலேயே பரிணாம வளர்ச்சியடைந்து ஆணாக பிறக்கின்றன. #தகவல்

*

வேறு எந்தத் தொழிலும் சரியாகத் தெரியாததால் எழுதியே ஆக வேண்டிய நிலை. எழுதும் தொழில் சரியாகத் தெரியக் கூடாது என்கிற இனிய நிர்ப்பந்தம் வேறு!

*

"எல்லாவற்றையும் சந்தேகப்படு" என்பது போய் "அத்தனைக்கும் ஆசைப்படு" வந்துவிட்டது.

*

என் நாவலுக்கு நானே வேறு பெயரில் மதிப்புரை எழுதிக்கொண்டிருந்ததை பார்த்துவிட்ட வாசகரை நாவலாலேயே ஒன்று போட்டு கொல்லையில் புதைத்தாயிற்று. :)))))

*

மகாராஷ்டிர மந்திராலயாவில் தீ விபத்தாமே? ஏன், கர்நாடகாவில் இருப்பது சும்மாதானே இருக்கிறது?

*

#Nowlistening ஆண்: பஞ்சணையில் நெஞ்சடைக்குதே என் நெஞ்சாங்கூட்டுப் பஞ்சாங்கமே... குழு: ஓஓஓஓ...

*

நம்மை மாதிரியும் ஒருவர் இருக்க வேண்டும்.

*

கருவுறும்போது இருக்கும் தன்னார்வ குரோமோசோம்களின் வலது மூலக்கூறு அடர்த்திக்கேற்ப திருமண வயது உடல் நிறை அமையும். #இன்றையதகவல்

*

நல்ல வீணை செய்து அது கெடும்படி புழுதியில் எறியும் வழக்கம் நம்மிடையே உள்ளதா என பாரதி கேட்கிறார். நாம் அவருக்கு என்ன பதில் சொல்லப்போகிறோம்?

*

கவிதை எழுதப் புனைபெயர் தேடுபவர்களே, இந்தாருங்கள் இலவசமாக: ரிடிகுலன்.

*

சிரிக்கும் பெண்ணையும் நம்பு, ஃபேஸ்புக் லைக்கை நம்பாதே.

*

இந்த ஆட்சியில் உதடுகளே ஒட்டக் காணோம்.

*

எனக்கு ஒரு மந்திரசக்தி வேண்டும். "வாய்ல என்ன கொழக்கட்டையா?" என மனைவியார் கேட்கையில் வாயில் நிஜமாகவே ஒரு கொழுக்கட்டை தோன்றிவிட வேண்டும்.

*

சிறுகதை எழுதும்போது முகமெல்லாம் செயற்கை விரல்கள் போல ஏதாவது மாட்டிக்கொள்ள வேண்டும் போல. விசைப்பலகை மேலேயே தூங்கி விழுந்துவிடுகிறேன்.

*

அபாண்டப் பழி என்ற பழைய பதமே நன்றாக இருக்கிறதே. 'அவதூறு' என்று புதிதாக ஒன்றைக் கிளப்புவானேன்? அவனவன் அகராதியைப் புரட்டிக்கொண்டிருக்கிறான்.

*

தேர்ந்த கவிதை வாசகரான மருத்துவ நண்பர் ஒருவர் ஒரு சிறுபத்திரிகைக் கவிதையைப் படித்துவிட்டுச் சொன்னார்

"inflammatory bowel disease" என்று.

*

எனக்கு 'ரைட்டர் பேயோன் பேரவை' என்ற அமைப்பிலிருந்து நிதி வருகிறது. இந்த அமைப்பு என் நிதியில் இயங்குகிறது.

*

என் மொழிபெயர்ப்பாளர்கள் இருவர் கூலி மேம்பாடு கோரி வேலை நிறுத்தம் செய்துள்ளனர். சிறிது நாட்களுக்கு இலக்கிய "அவுட்புட்" குறைவாக இருக்கும்.

*

விளம்பரங்கள் நிறைய கிடைத்தால் இலக்கிய விமர்சனத்திற்காக 'விமர்சிக்கலாம் வாங்க!' என்றொரு சிற்றிதழ் தொடங்க விருப்பம்.

*

இனிமேல் யாராவது செத்தால் 'அவர் காலமாகிவிட்டார்' என்று சொல்லாதீர்கள். 'அவர் நல்லவராகிவிட்டார்' என்று சொல்லுங்கள். அதுதான் வழக்கம்.

*

விருதுகள் என்னை மென்மையாக்கிவிட்டதாய் உணர்கிறேன். 5 ஆண்டுகளுக்குமுன் எல்லோரையும் மண்ணை வாரிப்போட்டு சபித்தபடி இருந்தது நினைவில் பசுமையாய்.

*

சமகாலத்தில் எதுவும் நம் ரசனைக்குப் பிடித்திருப்பதைவிட நம் அரசியலுக்குப் பிடித்திருப்பது நாலு பேருக்கு முக்கியம்.

*

வில்லியம் பெர்க்மனின் Persona - கதை நகருகிறதோ இல்லையோ, நம் மனநிலை பொறுமையின்மையை நோக்கிய நகர்தலை எட்டுகிறது.

*

பொறுமை ஆறாக சுழித்தோடினால்தான் உலகபடம் பார்க்கமுடியும். சுழிப்பு போனால் உறக்கம் தன் சொக்குதல் கத்தியால் சரமாரியாக குத்தத்தொடங்கிவிடும்.

*

பெற்றோர்களே, குழந்தைகளுக்குப் பொறுமையையும் ஏமாற்றத்தையும் கற்றுக்கொடுங்கள். குழந்தைகளே, நல்லா படிச்சு முன்னுக்கு வரணும், புரியுதா?

*

ஒருவர் பேச்சை ஒருவர் கேட்டுத்தான் வாழ வேண்டும். ஆனால் அந்த இரண்டு ஒருவரும் ஒரே ஆளாக இருக்கக் கூடாது.

*

ஏலியர் படையெடுப்பு யன்னல்வழி பார்த்திடு/காலியாய் நீர் ஆகும் வரை. #மழைப்பா

*

அழுக்குச் சாலையில் ஓடுமிச் சிற்றாறு/வழுக்கினால் நீச்சல் குளம். #மழைப்பா

*

மழையில் அசையாமல் நனைந்திடும் எருமை/தழையை மட்டும் அசைத்திடும். #மழைப்பா

*

மழையொத்த ஒன்றினைப் போல்/தழைத்திறங்கும் தாரை. #மழைப்பா

*

உன் கன்னக் குழிகளில்/எத்தனை மழைத்துளி பிடிக்கும்? #ட்விட்டர்கவிதை

*

கண்ணீரும் கம்பலையுமாக வந்து நின்ற வெள்ளைக்காரப் பெண் கடைசியில் பிங்க் ரேஞ்சராம். அட!

*

நான் எழுதுவது மாதிரி கவிதைகளை சங்க

இலக்கியத்தில்கூட பார்க்க முடியாது. எந்த 'நல்லா எழுதனாரும்' என்னை மிஞ்சியதாகத் தெரியவில்லை.

*

வாழைக்கனி புசித்துக்கொண்டிருக்கிறேன். என் தேகத்திற்கான பொட்டாசியம் அதில் உயிர்த்திருக்கிறது.

*

சமூகத்திற்கு ஒரு reboot தேவை. ஒன்று விடாமல் அனைத்தையும் தடைசெய்துவிட வேண்டும். பிறகு நமக்கு தேவையானவற்றை மட்டும் போராடி பெற்றுக்கொள்ளலாம்.

*

போகாத இடந்தனிலே போக வேண்டாம் என்று கெஞ்சினால் கேட்கவா போகிறது இவ்வாழ்க்கை?

*

'ஆசைய காத்துல' பாடல் கேட்கப்பட்டுக்கொண்டே இருக்க வேண்டும் போல் நினைக்கப்படலாம். அவ்வளவு விரும்பப்படுகிறது அந்தப் பாட்டு! #இசை

*

கடைசியில் யேர்மனி யேயிக்கவில்லை. #காற்பந்து

*

'உன் பெற்றோர் மெனக்கெட்டு 300 மைல் பயணித்து நம் வீட்டுக்கு வருகிறார்களே, இங்கு பத்து நிமிடமாவது தங்குவார்களா?' என்று கேட்டதுதான் குற்றம்.

*

திட்டுபவர்கள் 3 வகை: நிஜமாக திட்டுபவர்கள்; கும்பலோடு திட்டுபவர்கள்; நல்லவேளை, இவனை திட்ட ஓரிரு காரணமாவது கிடைக்கிறதே என்று திட்டுபவர்கள்.

*

வாழ்க்கையை எழுத்துக்கு அர்ப்பணித்தாயிற்று. இனி அதைக் கட்டிக்கொண்டுதான் அழ வேண்டும்.

*

தூங்குவது போல் நடிப்பவர்கள் புரண்டு படுப்பதில்லை.

*

தோமோ அரிகாதோ கொஜாய்மாஸ் என்பர்/நாமோ நன்றியோடு சரி. #ஜப்பான்பா

*

"சும்மா புக்கு புக்கா எழுதுனா என்னா ப்ரயோஜனம்? பேங்குல ஏதாச்சும் சேத்து வெச்சாலாவது காசுக்கு ஆகும்" - நடைமுறை பேசுகிறது.

*

அல்ல அல்லக் குறையாத ஆழம் என் படைப்புகளில் கைநிறையக் கிடைப்பதாக ஒரு வாசகர் இணையத்தில் எல்லோரிடமும் சொல்லித் திரிகிறார்.

*

கண்ணதாசன் தப்பாக எழுதிவிட்டார். "நாம் இருவர் அல்ல ஒருவர் இனி தெரியுமா"விற்குப் பின்னரே "என்னை விட்டு ஓடிப் போக முடியுமா" வர வேண்டும்.

*

உருப்படியான இளைஞர்களைக் கொடுங்கள், அதே போல எனக்கு பதிலாக ஒழுங்கான ஆள் யாரையாவது நியமியுங்கள் - நான் உலகை மாற்றிக் காட்டுகிறேன்.

*

இளம் எழுத்தாளர்களுக்கு: ஒரு நல்ல நாவலை எடுத்துக்கொண்டு அதன் மேல் ட்ரேசிங் பேப்பர் வைத்து கவனமாக எழுதுங்கள். உங்கள் எழுத்தின் தரம் வளரும்.

*

முதல் வாக்கியத்திற்கு 1 வியப்புக்குறி/கேள்விக்குறி போட்டு அடுத்ததிற்கு 2 போடுவதை Numerical Progression of Punctuation Marks என்கிறார்கள்.

*

என்னைப் பற்றிய பத்திரிகை கட்டுரையின் முதல் வார்த்தை: "பேயோன்!" ஃபெடரர் பற்றிய கட்டுரைக்கு:

"ஃபெடரர்!" ஔரங்கசீப் பற்றியதற்கு: "ஔரங்கசீப்!"

*

கையில் இருந்த சுவையான கடைசி பிஸ்கட் தீர்ந்துபோனது. ஏமாற்றத்துடன் வெறுங்கையைப் புரட்டிப் புரட்டிப் பார்த்துக்கொண்டிருக்கிறேன்.

*

அகலிகை கல்லானாள், சரி. எவ்வளவு பெரிய கல்?

*

ஜூலை 4:- இன்று அமெரிக்காவுக்குத் திருமண நாள், எனக்கு சுதந்திர தினம். இப்படி மாற்றிச் சொன்னால் நன்றாக இல்லை?

*

அமெரிக்க விடுதலை நாளான இன்று நானறிந்த பலருக்கும் திருமண நாளாகியுள்ளது. அதே போல ஆகஸ்ட் 15 எத்தனை பேருக்குத் திருமண நாளோ, என்ன பிரச்சினையோ!

*

படிக்க நேரம் இருக்கிறவன் மற்றவன் எழுதுவதைப் படிக்கிறான்; என்னை மாதிரியா?

*

வாசகர்களே, ஹிக்ஸ்-போசான் துகள் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது. குறிப்பிடத்தக்க நிகழ்வு என்பதற்கு பலரும் உதாரணம் கேட்டிருந்தீர்கள். இதுதான் அது.

*

ஹிக்ஸ்-போஸான் துகளின் நடமாட்டம் பௌர்ணமியன்று அதிகமாக இல்லாவிட்டிருந்தால் விஞ்ஞானிகள் இன்னும் திணறியிருப்பார்கள். இது தலைகீழாகவும் பறப்பது.

*

ஹிக்ஸ்-போசான் துகள் கண்டுபிடிக்க எடுத்த முயற்சியே மர்மக்கதை போல் சுவையானது. ஆனால் இது குறித்த எளிய பொதுப் புரிதல் தடை செய்யப்பட்டுள்ளது.

*

ஹிக்ஸ்-போசான் இயற்பியல் சார்ந்த புரியாமையைக் கட்டிக்காக்கும் பொறுப்பில் ஒரு பகுதி, தமிழ் நாளேடுகள், பத்திரிகைகளிடம் அளிக்கப்பட்டுள்ளது.

*

மழை ஒரு பாட்டம் வந்தால் கவிதை பாடலாம் என்று பார்த்தால் துளிகூடக் காணோம். நாம்தான் மொட்டை மாடியிலிருந்து நாலு பக்கெட் கொட்ட வேண்டும் போல.

*

Postpone = அப்புறப்படுத்து. #மொழியாக்கம்
#லபக்குதாஸ்

*

யாராவது எதையாவது எழுதிக்கொண்டுதான் இருப்பார்கள். எல்லாவற்றையும் படித்தாக வேண்டும் என்றில்லை.

*

அபூர்வமாக எழுதி சுமாராக எழுதுவதைவிட எப்போதும் சுமாராகவே எழுதிக் குவிக்கலாம்.

*

மவுத் ஆர்கன் = சங்கு?

*

மேஜையில் வைக்கும் செக்காவின் 'மூன்று ஆண்டுகள்' சரிந்து தரையில் விழுகிறது. வைத்தால் வைத்த இடத்தில் இருக்கத் துப்பில்லாத உலக இலக்கியம்!

*

எச்சரிக்கை, கவிஞர்கள்
ஜெயித்துக்கொண்டிருக்கிறார்கள்.

*

நினைவுகளைக் கிண்டிவிட்டால் உட்கார்ந்த இடத்தில்

சரணாகதி போடும் வாசகர்கள் இருக்கும் வரை கிண்டிக்கொண்டே இருக்கலாம்.

*

அடுத்த திட்டம்: எழுதுவதற்கு அடியோடு முழுக்குப் போட்டுவிட்டு புது வகை புனைவுகளை எழுதத் தொடங்க வேண்டும்.

*

ஞாயிற்றுக்கிழமை மாலை ஐந்து மணிக்குக் கவிதை எழுதுபவன் உருப்பட்ட சான்றுகள் சரித்திரம் எங்கும் காணக் கிடைக்கின்றன.

*

நெருக்கி நட்டு நெல்லைப் பெருக்கு. #எழுத்து

*

'மேல்நிலைப்பல்லி' என ஒருவர் நீட்டி முழக்கி எழுதியிருப்பதைப் படித்தேன். இதற்கு பதிலாக கவித்துவமாய் 'உயர்பல்லி' என்றே எழுதிவிடலாம்.

*

நாவல் எழுதிக் கடனை அடைக்கும் சொகுசு தாஸ்தாயெவ்ஸ்கிக்கு இருந்திருக்கிறது. 200 ஆண்டுகளுக்கு பின் நாம் கடன் வாங்கி நாவல் எழுத வேண்டியுள்ளது.

*

இன்றும் பெண்கள் பொருளாதார சுதந்திரம் என நடமாடும் கூண்டுக்கிளிகளாக ஓடாய் தேய்வது கஷ்டமாக உள்ளது. சொந்த வீட்டு அடுப்படியே அவ்வளவு கசக்கிறதா?

*

மணவாழ்க்கை சுயமுன்னேற்ற நூல் எழுதுகிறேன். தலைப்பு: 'இச்சையிலிருந்து இம்சைக்கு: ஆசை அறுபது நாள், மோகம் முப்பது நாள்: பூந்தோட்டமா வாழ்க்கை?'

*

தெருவில் ஒரு குழந்தையின் புத்தகப்பை தோளிலிருந்து விழுந்தது. நான் எடுத்துக் கொடுத்து உதவப் போனால் பையைத் தூக்கவே முடியவில்லை. 'நகருங்க அங்கிள்' என அவனே ஒற்றைக் கையால் தூக்கி மாட்டிக்கொண்டான். பூஸ்ட்டும் காம்ப்ளானும் இக்காலக் குழந்தைகளுக்கு அசுரபலம் தந்துள்ளன.

*

"பாவம் என் அம்மாவுக்கு ஒரே அலைச்சல்." - "யார் அம்மாவுக்கு என்றாய்?" - "என் அம்மாவுக்கு." - "பிறகென்ன பிரச்சினை?" #உரையாடல்

*

அடுத்தவனின் மகிழ்ச்சியும் நிலைக்காது என்று

ஆறுதலடையும் மனப்பக்குவம் நமக்கு அவசியம்.

*

செம்புலப் பெயல் நேரம் / சாலை நதிகளை மதிக்கவும். #மழைக்கவிதை

*

வந்ததும் அரை மணிநேரத்தில் கிளம்பப்போகிற தொனியில் பேசத்தொடங்கும் விருந்தாளிகள் அரை மணிநேரம் கழித்து 1 மணிநேர தொனிக்கு மாறிவிடுகிறார்கள்.

*

கெட்ட கனவு: எனக்கு நோபல் பரிசு கிடைக்கிறது. ஆனால் என் ஏற்புரையை கேட்டபின் பரிசை பிடுங்கிக்கொள்கிறார்கள். அடுத்து மேடையில் ஒரே அடிதடி ரகளை.

*

கவிதை நடையை கவிதைக்கும் காலை வாக்கிங்கிற்கும் மட்டுமே வைத்திருக்கிறேன்.

*

'துரோகத்தின் கரிய நிழல்', 'பிரிவின் கரிய நிழல்' - எது சூப்பர்? ஆனால் இரண்டுமே கிளுகிளுப்பாகத்தான் இருக்கிறது. தேவைக்கேற்ப பயன்படுத்தலாம்.

*

மனிதன் ஆயுதங்களை கண்டுபிடிக்குமுன்னர் கற்போர்தான் செய்துகொண்டிருந்தான். இன்று ஆயுதங்களை விற்போர் வரை வந்துவிட்டோம்.

*

திசைகாட்டிப் பறவை திரைப்பட மாகும்/இசை இளைய ராஜா. #வெண்பா

*

நல்லதை தினமும் செய்தால் நல்லவனுக்கே அலுத்துவிடும். ஆனால் கெட்டதை தினமும் செய்தால் போலீஸ் பிடித்துவிடும்.

*

மனித மனத்துக்காரன் பலவீனத்திற்கு சொந்தக்காரன்.

*

உரைநடை தவிர எதுவும் விற்பதில்லை. அதனால்தான் சில கவிஞர்கள் முடிந்த வரை உரைநடை போல் கவிதை எழுதுகிறார்கள்.

*

"ஊரோடு ஒத்து வாழ்." ஒரு எழுத்து மாறினால் வியாதிதான், ஹெஹ்ஹெஹ்ஹெ!

*

சிலரின் மிதமிஞ்சிய சமூக அக்கறையைப் பார்த்தால் அவர்கள் ஏன் இன்னும் குடிகாரர்களாகவில்லை என ஆச்சரியமாக உள்ளது.

*

இன்று பிறந்த நாள் காணும் ரசிக வாசகர் பேயோன் ஸ்ரீநாத்திற்கு பிறந்த நாள் வாழ்த்துகள்.

*

அதே போல இன்று மண நாள் காணும் ரசிக வாசகர் பாம்புத் தைலம் சரவணனுக்கு மண நாள் வாழ்த்துகள்.

*

எங்களுக்கெல்லாம் புக்ககம் என்றால் லைப்ரரி.

*

தர்மத்தின் வாயதனை சூது பொத்தும். தர்மம் மறுபடி வையும். #மீள்பாரதி

*

மன்னிப்புக் கேட்டு அவமானம் அடைவதா மன்னிப்பு கேட்டு தப்பித்த மனநிம்மதியில் மௌனமாகப் புழுங்குவதா? #இல்லறக்குழப்பங்கள்

*

ஆங்கில "போர்னோ"வில் softcore, hardcore என இருவகை இருக்க, நாம் அதை "கில்மா" என குறுக்குவது முறையல்ல. முறையே மென்கில்மா, வன்கில்மா எனலாம்.

*

விருந்தாளிகளே, வருடக்கணக்கில்கூட வேண்டுமானால் தங்கிக்கொள்ளுங்கள். ஆனால் சொன்ன நேரத்தில் கிளம்பிவிடுங்கள். காத்திருப்பை தாங்க முடியவில்லை.

*

உன்னை பார்த்த பின்பு நான், நாமாகி போயின. #ட்விட்டர்கவிதை

*

காலை 5.30க்கு பால் வாங்குபவர், நீல மை பால்பாயின்ட் பேனாவால் எழுதுபவர், மீசையை விரலால் நீவுபவர் என என் நண்பர் லபக்குதாஸ் ஒரு பன்முக ஆளுமை.

*

இன்றைய இரவுணவு மெனு: கிறை போண்டா, ஸ்பெசல் தொசை, மல்லிபூ இட்டிலி மற்றும் பெடி தொசை. மனைவி ஊரில் இல்லாத சௌகரியம்.

*

சும்மா ஒரு மாறுதலுக்காக ஒரு தன்னிலை விளக்கம். ஒவ்வொரு முறையும் செய்வது கட்டுபடியாகாது - http://www.twitlonger.com/show/idjrmg

*

நான் எழுதிக்கொண்டிருக்கும் புதிய திரைப்படப் பாடலில் "மீசையில் ஒட்டாத மண்ணே" என ஒரு கதாநாயகி வர்ணிப்பு வரி வருகிறது. மிகவும் ரசித்தேன்.

*

திரைப்பட விழாக்களில் திரையிடப்படும் சில படங்களின் ஒன்லைனரை அறுதியிட்டுக் கூற முடியவில்லை.

*

'நான் ஈ' படத்தில் ஈதான் கதாநாயகன். அது போல 'டார்க் நைட் ரைசஸ்' படத்தில் பேன்தான் வில்லனாம்.

*

ஒருவரை வாழ்த்தும்போது 'வாழ்த்துகள்' என சொன்னாலே போதும். "நல்"வாழ்த்துகள் என நம் வாழ்த்துகளுக்கு நாமே சோப்பு போடுவது எனக்கு பிடிக்காது.

*

நமக்கெல்லாம் ராமாயணத்தில் வரும் 'சாப்பாட்டு ராமன்'தான் தெரியும். ஆனால் மகாபாரதத்திலும் ஒரு 'பூரி சிரவசு' இருக்கிறான்.

*

காலையில் குடிக்கும் முதல் காபியே இளையராஜா இசை

போல் இனிப்பது கொடுமை. சர்க்கரையைக் குறைத்துப் போட்டால் இவள் அப்பன் சொத்தா குறைந்துவிடும்?

*

"பன்னிரு விழிகளிலே பரிவுடன் ஒரு விழியால் என்னை நீ பார்த்தாலும் போதும்" - மனத்தில் காட்சியாக்கிப் பார்த்தால் எவ்வளவு வேடிக்கையான வரி!

*

காகிதக் கப்பல் செய்வது எப்படி என செயப்பாட்டு கட்டுரை எழுதினால்கூட "80களில்" என ஒரு வார்த்தை சேர்த்தால் 'முக்கியமான கட்டுரை' ஆகிவிடுகிறது.

*

மனைவி திட்டினால் மட்டும் ஒரு பெண்ணிடம் திட்டு வாங்குகிற வெட்கமே நமக்கு வருவதில்லை. ஒரு மனைவி நான்கு பெண்களுக்கு சமம் என்பதாலோ என்னவோ.

*

சமஸ்கிருத வார்த்தைகளின் உபயோகத்தைப் பகிஷ்கரித்தால்தான் தமிழ் தன்னை மேலும் ஸ்திரமாக, நிர்மலமாக ஸ்தாபித்துக்கொண்டு விருத்தி பெற முடியும்.

*

ஒரு சிறுகதையை சிற்பம் போல் உருவாக்க, கண்ணை மூடிக்கொண்டு மிகமிக வேகமாக தட்டச்சு செய்ய வேண்டும். அடுத்து தேவையற்ற எழுத்துகளை நீக்க

வேண்டும்.

*

சிலரின் அறிவு விசாலத்திற்கும் விசய ஞானத்திற்கும் என்னால் ஈடுகொடுக்க முடியாது. நான் ஒரு நோபல் கேஸ், அவ்வளவுதான்.

*

மனைவிகளே, பெருந்தன்மையோடு நம்பிக்கை வைத்துச் சொல்வதற்கும் அப்பாவியாக உளறிவிடுவதற்கும் இடைப்பட்ட வித்யாசத்தைப் புரிந்துகொள்ளுங்கள்.

*

சமகால தமிழ்க் கவிதையில் மூன்று போக்குகள் தனியாகத் தெரிகின்றன: 1. கவித்துவக் கவிதைகள், 2. கவிதைமை கவிதைகள், 3. 'கவித கவித' கவிதைகள்.

*

நாம் எழுதுவதைப் பெண்களும் வாசிக்கிறார்கள் என்று அறியும்போது திருப்தியாக இருக்கிறது. அவர்களுக்கும் சேர்த்துதானே எழுதுகிறோம்.

*

ஃபெடரிகோ ஃபெல்லினியின் 'எட்டரை': குறிப்பிடத்தக்க 138 நிமிடப் படங்களில் ஒன்று. சிறப்பான வசனங்கள். லாஜிக் பார்க்காமல் ரசிக்கலாம்.

*

மிகப் பெரிய அழகான பலூனை கஷ்டப்பட்டு ஊதிவிட்டு அதைக் கூர் ஆணியால் குத்தி உடைப்பது போல் இருக்க வேண்டும் என் கவிதை.

*

பெயர் வரதகோபாலன், ரத்தினதுரை என இருக்கும். இருப்பதோ யுஎஸ்ஸில். அங்குள்ள வில்லியங்களும் ஸ்மித்துகளும் என்ன நினைக்கிறார்கள் இவர்களைப் பற்றி?

*

இனி யாரும் தப்பே செய்யக் கூடாது என்று சொல்லிவிடுகிறார்களாம். எப்படி இருக்கும் ஒவ்வொருத்தனுக்கும்!

*

என் தளம் 2 கோடி முறை பார்க்கப்பட்டுள்ளது. பார்த்தது இத்தனை பேரா, ஒரே ஆள் பார்த்தானா அல்லது 10ஆல் வகுத்துக்கொள்ள வேண்டுமா என தெரிய வேண்டும்.

*

எழுத்தாளர் கோர் வைடல் சாவு கேட்டு கையிலிருந்த புத்தகத்தை வைத்துவிட்டேன். இனிமேல்தான் அலமாரியில் வைக்க வேண்டும். படித்தாயிற்று. நல்ல நூல்.

*

நான் ஈ - காக்டெய்ல் கிஷ்கிந்தா! ஒரு காட்சியில் ஒரு விசயம் ரகளை! ரிஸ்க் எடுத்த இயக்குநருக்கு குட்மார்னிங்! படம் ஒரு பாப்கார்ன் பந்துவராளி.

*

அன்று... கடவுளை நம்புபவன் காட்டுமிராண்டி! இன்று... கடவுளை நம்புபவன் மாட்டுகிறாண்டி!!

*

எனக்கொரு அண்ணன் இல்லாத குறையை மனைவி தீர்த்துவைக்கிறார்.

*

என்னை உண்மையாக நேசிப்பவர்களிடம் பொய் சொல்ல நேர்கையில் சற்று ஜாலியாக உள்ளது. என் மீதான அவர்கள் நம்பிக்கை நன்கு பயன்படுவதான திருப்தி வேறு.

*

நாம் செய்வதைவிட நமக்கு நடப்பது அதிகமாக இருக்கும் வரை எதுவும் மாறப்போவதில்லை.

*

பிரச்சினைதான். சண்டைதான். அதற்காக காபி கேட்டால் வெறும் டம்ளரைக் கொண்டுவந்து லொட்டென்று

வைப்பதா? நாடக மேடையில் இருப்பதான உணர்வு.

*

வாழ்க்கையில் தவறே செய்யாத கணவனைக் காட்டு. அவனுடன் போட்டோ எடுத்துக்கொள்கிறேன்.

*

கோபத்தில் வார்த்தைகளைக் கொட்டிவிடாதே. பிறகு அவற்றை அள்ள முடியாது. அட நிஜமாகவேதான். நீ வேணால் அள்ளிப் பாரேன்.

*

வாசகக் கவிஞர் மனிதபாரதி திடீரென திருமணத்திற்கு ஆளாகிவிட்டார். இனி காதல் கவிதை எழுத மாட்டார். ஆனால் தனிமை கவிதை நிறைய எதிர்பார்க்கலாம்.

*

ட்விட்டரில் இரண்டு நாள் காலாட்டாமல் இருந்தால் என்னை இறந்துவிடுவார்கள் போலிருக்கிறதே!

*

மிகையான பாராட்டுகளுக்கு நன்றி சொல்ல கொஞ்சம் வெட்கங்கெட்டதனம் தேவைப்படும்.

*

"சிறு குறிப்பு" என்பதைத் தவறுதலாக "குறி சிறுப்பு" என

எழுதிவிட்டேன் ஹெஹ்ஹெஹ்ஹெ! #snooperism

*

என் வீட்டு வாசலில் என் பெயரைச் சொல்லிப் பெண்கள் குலவை. இந்தக் கலை வடிவம் மறைந்துவிட்டது என்று நினைத்துக்கொண்டிருந்தேன்.

*

ஒரு வார்த்தை இரண்டு சென்டி மீட்டருக்கு மேல் நீளமாக இருந்தால் வாசகன் படிக்க சிரமப் படுவான். இலக்கணம் பார்க்காமல் அதை உடைக்க வேண்டும்.

*

எழுத்தாளனால் எல்லோரையும் திருப்திப்படுத்த முடியாது. கம்பனைக்கூட 'ராமஜெயம்' என்று கிண்டல் செய்பவர்கள் இருக்கிறார்கள்.

*

"ஏன் சார், கொஞ்சம் நல்ல கவிதையா தரலாமே?" என்றார் 'இடைநிலை' ஆசிரியர். "ஹிஹி, நீங்க எப்பவும் சொல்வீங்க. எனக்குதான் மறந்துடுது" என்றேன் நான்.

*

ஆளைப் பார், வெறு.

*

அடுத்த வீட்டு மலையாளிகள் ஓணத்தைக் கொண்டாடுகிறார்கள். 'மேகமே, மேகமே' ராகத்தில் 'ஓணமே, ஓஓஓணமே' என்று வீட்டினர் குழுவாகப் பாடுகிறார்கள்.

*

ஒழுங்காக டீ போடத் தெரியாத மலையாளிகள்கூட ஓணத்திற்காக வேலை மெனக்கெட்டு தமது டீக்கடைகளை மூடிவிட்டனர்.

*

எழுத்துத் தமிழில் எழுதினாலே கவித்துவம் என்கிறார்கள். எதற்கு மெனக்கெட வேண்டும்?

*

வாழ்க்கை: மாற்றத்தக்கதல்ல. கேட்கும் பொழுது காண்பிக்க அல்லது கொடுக்கப்பட வேண்டும். பரிசோதனைக்கு உட்பட்டது.

*

நீதிபதிகளே, பெண்களுக்கு சாதகமாக தீர்ப்பு கொடுக்கும்போது 'அடிக்கிற கைதான் அணைக்கும்' பாடாதீர்கள். 'எவன்டி உன்னை பெத்தான்'கூட பரவாயில்லை.

*

ரைட்டர் பேயோன் watched 'The hottest Maxim covers

that will set your screen on fire' See more...

*

டாப்லெஸ் சிவலிங்கம் போல் அகல் விளக்கு...
#வர்ணனை

*

ராப்பெய்து பகற்கடுக்கும் கருமமிகு சென்னை வானிலை.

*

"ஏங்க, எங்க பெரியப்பா இருக்காருல்ல..." "பிரச்சனையே அதுதான்". உரையாடல் முடிந்தது. #ஹெஹ்ஹெஹ்ஹெ

*

வாத்தியார் மகன் மக்கு. எழுத்தாளர் மகன் கதாபாத்திரம்.

*

எங்கும் கணேச வியாபகம் பாரு/கங்கா ஸ்நானம தாச்சா?
#விடுமுறைதினவெண்பா

*

"அடடே, தூங்கிட்டீங்களா?" என்று கேட்டு எழுப்பிவிடுவது ஒரு கலைதான். நிஜமாகவே வெள்ளந்தி போல் நடிக்கத் தெரிந்தால்தான் அது கைவரும்.

*

ஏ தமிழக அரசே!!! நாளைக்குப் பள்ளிக்கூடங்கள் உண்டா? மகன் பள்ளியிலிருந்து இது வரை தகவல் இல்லை. அதனால்தான் கேட்கிறேன்.

*

வியாழக்கிழமை ஏழைக் கிழவன் முகத்தில் கவலை ரேகைகள் சுதந்திர இந்தியாவின் வரைபடமாய்....!!
#ஃபேஸ்புக்

*

வீழ்ந்தது திருவிலங்கை அடுத்து வருது/கீழடி அணியும் கவிழ. #கிரிக்கெட்

*

சீதைக்கு ராமன் சித்தப்பாவா என்று தெரியாது. ஆனால் கண்டிப்பாக கொடுமைக்கார சித்தி அல்ல எனலாம்.

*

காட்சிக்கு எளியவன் கடும் சொல் பேசுபவனாக மட்டும் இல்லாவிட்டால் மன்னனுடைய நிலம் அவனைப் பற்றி அதிகப்படியாகப் பேசும்.

*

மணி சங்கர் ஐயர்... பழுத்த அரசியல்வாதி என்பதால் MONEY சங்கர் ஐயர் ஹஹ்ஹஹ்ஹஹ்ஹா!
#நகைச்சுவை

*

கவிஞர்களே, பத்தி எழுத்தாளர்களே, இன்றைய இரவு எதனுடைய இரவு? கவித்துவமாக ஏதாவது வைத்திருப்பீர்களே!

*

Female sexuality is a schizoid duality என்றால் male sexuality மட்டும் mechanoid singularity-யா? #டவுட்டு #ட்விட்டர்

*

பசுவதை இன்றி ருசிமிகு பீஃப் இல்லை.

*

20 நிமிட சீரியல் அத்தியாயத்தில் 10 நிமிடம்தான் கதை நடக்கிறது. அந்தக் கதையை நமக்குச் சொல்லவோ ஒரு மணிநேரம் ஆகிறது. #பெண்கள்

*

பிடித்தவர்கள் விருது பெறும்போது "அவார்டு வாங்கிருக்காரு" என கூறும் லபக்குதாஸ், பிடிக்காதவர்கள் பெறும்போது "அவரு விருதாயிட்டாரு" என்கிறார்.

*

இலங்கையில் நடிகர்களைக் குறிக்க "பாவனையாளர்கள்" என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார்கள் போல. நன்றாக

இருக்கிறது.

*

கையில் கொஞ்சம் நேரம் இருப்பதால் (cont) http://tl.gd/jj68f9

*

தகவல் பிழைகளும் தகவல்களே. அவை பிழையாக இருக்கின்றன, அவ்வளவுதான் வித்தியாசம்.

*

"நோயுற்று" என்று எழுதக் கூடாது. அது தெளிவாக இருக்கும். "நோய்மையுற்று" என்று எழுத வேண்டும். அதுதான் கெத்தாக இருக்கும்.

*

சில வயிறுகள் அபாயகரமான வெப்பநிலைகளில் எரிவதை காண முடிகிறது. ஒரு சராசரி மனித வயிறு எரிவதற்கு பாதுகாப்பான வெப்பநிலை என்ன என்று அறிய ஆவல்.

*

திரையுலகினர் என் படைப்புகளைப் படிக்க ஆரம்பித்துள்ளனர். மணிரத்னம்சார் கூட "ஏன்?" என்று கேட்டு ஒரு மின்னஞ்சல் அனுப்பியிருக்கிறார்.

*

பைக்கில் விரைந்த நண்பரை மாடியிலிருந்து பார்த்து கூப்பிட்டேன். என்னை பார்த்துக்கொண்டே ஒரு வேன் மீது மோதிவிட்டார். கண்ணெதிரில் ஒரு விபத்து!

*

அகலிகை கதையை உல்டா செய்து பிக்மேலியன் ஆக்கியிருக்கிறார் பெர்னார்ட் ஷா.

*

எவனைக் கேட்டாலும் வெளிநாட்டில் வாழ்வதாகச் சொல்கிறான். அப்படியும் ஏன் பேருந்துகளில் இவ்வளவு கூட்டம்?

*

பௌலோ கொய்லோ ஒரு ஆண்பிள்ளையாக இருந்தால் என்னைப் பேட்டி எடுக்கட்டும். ஒரே ஒரு ஆண்பிள்ளையாக இருந்தால் போதும்.

*

'கோந்தை'யில்தான் 'கோதை' இருக்குதம்மா.

*

"பொய்யுனது நம்பிட ஆள்வேறு பாராய்/மெய்யொன்று நானறிய வேண்டும்." இக்குறளிலிருந்தே "எனக்கொரு உண்மை தெரிஞ்சாகணும்" என்ற சினிமா வசனம் வந்தது.

*

கொட்டுநீர்ப் பாசனம் வெட்டியாய்ப் போகுதே/கட்டமாய் இருக்குமன சுக்கு. #மழைப்பா

*

மழையி னெல்லாத் துளியு மோர்சை/ஸிழைவது மாந்தர்க் கழகு. #மழைப்பா

*

கடைமழை போல் பெய்யுது பாரீர்/அடைமழை எங்க ளூரில். #மழைப்பா

*

மாரிமுத்துகள் ஆயிரர் தெருவோடு கின்றார்/லாரி லாரியாய் நீர். #மழைப்பா

*

கொங்குநாட்டுத் தேர் போல் சீராக ஓடும் வாழ்க்கை எனும் அழகிய சிறையில் அடைபட்ட தும்பி, மனதில் உள்ள காமத்தைச் சொல்லாமல் கண்டதையும் பேசுமோ?

*

வானம் எனக்கொரு பேதி மரம். #மழை

*

ஏதோ நோய் பரவி உலகில் எல்லோரும் இறக்கின்றனர், ஒரு ஆள் தவிர. வீட்டுக் கதவு தட்டப்படுகிறது. யாரென்று பார்த்துவிட்டு வருகிறேன். #ட்விட்டர்கதை

*

சாலை விபத்துகளையும் டெங்குவையும் மோத விட வேண்டும். #celebritydeathmatch

*

"அதற்காக இவரை முழுவதுமாக நிராகரித்துவிட முடியாது" என்று ஒரு விமர்சகர் என்னைப் பாராட்டியுள்ளார்.

*

திரில்லர் படத்திற்கான ஒன்லைனர்: கதாநாயகனை பாதிப்பது குறிப்பிடத்தக்க ஒன்று. அந்த ஒன்று என்பது என்ன என்று கண்டுபிடிப்பது மீதிக் கதை.

*

தெருவில் உர்ரென்ற மூஞ்சியுடன் எதிரில் வந்தவர் என்னைப் பார்த்துவிட்டு "இவன் வேற" என்று முணுமுணுத்துச் சென்றார். பாவம், என்ன பிரச்சினையோ.

*

'ரவுடி'யை சிலர் 'இரவுடி' என்று எழுதுகிறார்களே, அதைப் படிக்கும் பெண்கள் தூங்கிவிட மாட்டார்களா?

#டவுட்டு

*

வார்த்தைகள் இருந்தால் தர்க்கம் வேண்டாம்.

*

ஒரு நாளேட்டில் "வேலை வாய் பிளந்தவன்" என்பது "வேலை வாய்ப்பிழந்தவன்" என தவறாக வந்துள்ளது. தேசத்தின் புரூப்ரீடர்கள் செத்துப்போய்விட்டார்களா?

*

மனிதன் அறிவை எப்படியெல்லாம் பயன்படுத்துகிறான்! வியப்பாக இருக்கிறது!

*

நீலம் புயலில் ஒரு முழு கருவேப்பிலைக் கிளை உடைந்து ரசத்தில் விழுந்திருக்கிறது.

*

நடிகை ஹன்சிகா மோட்வானி குறித்து நம்மிடையே போதுமான தரவுகள் இல்லை. இத்துறையில் ஆய்வு நூல்கள் இல்லவே இல்லாமை தனியே விவாதிக்கப்பட வேண்டியது.

*

ஒரு அணு உலை பொறியாளரின் மகளும் அடிப்படையில்

இந்தி பாடகியுமான ஷ்ரேயா கோஷல், கூடங்குளம் மற்றும் இந்தித் திணிப்பு பற்றி என்ன நினைக்கிறார்?

*

தீபாவளி வருகிறது. சொம்பை எடுத்து உள்ளே வை.

*

முதலில் உன்னைக் கண்டு சிரிப்பார்கள், பிறகு எதிர்ப்பார்கள், பிறகு அலட்சியப்படுத்துவார்கள், பிறகு மறந்துவிடுவார்கள். அப்போது ஜெயித்துக்கொள்.

*

ஒருவனின் ரகசியம் இன்னொருவனுக்கு பிட் நோட்டீஸ்.

*

காடு 'வா வா' என்றது. வீடு 'ஜேஜே' என்கிறது.
#ட்விட்டர்கதை

*

கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது /
இச்சகத்திலோரெலாம் எதிர்த்து நின்றபோதிலும் /
அச்சமில்லை அச்சமில்லை என்று அதுவும் கூறுது.

*

யாராவது என்னை பாமுக், குந்தேரா மாதிரி எழுத்தாளர்களுடன் ஒப்பிட்டுப் பாராட்டி எழுதுங்களேன்.

இருபது வருடங்களாக எழுதிக்கொண்டிருக்கிறேன்.

*

தீபாவளியைத் தவிர்க்க பணக்கார ஆஸ்துமாக்காரர்கள் வெளிநாடுகளுக்குத் தப்பி ஓட்டம்.

*

'தமிழ்த் தாய்' என்பதை "உல்டா" செய்து புதிதாக 'தாய்த் தமிழ்' என ஒன்றை ஆரம்பித்திருக்கிறார்கள் போலயே.

*

காபி கொடுக்கத் தாமதிப்பதுதான் பெண்ணுரிமை என்றால் அப்படியொரு பெண்ணுரிமை பெண்களுக்கு மட்டுமல்ல, ஆண்களுக்கும் வேலைக்கு ஆகாது.

*

மனித உரிமை மீறலாக இல்லாத வரைதான் பெண்ணுரிமைக்கெல்லாம் மரியாதை. காபி போடும்போதாவது கொஞ்ச நேரம் கொடியை மாப்பிங் ஸ்டிக் அருகே சாய்த்துவை.

*

மகிழ்ச்சியாக தீபாவளி கொண்டாடுகிறார்களாம். தெருக்களில் புத்தாடையுடன் பட்டாசு வெடிப்பவர்களின் இளிப்பைத் தாங்க முடியவில்லை. அடங்குங்களடா!

*

"அமுதூற்றினை ஒத்த இதழ்களும்" - இந்தப் பிரச்சினைக்கு hypersalivation என்று பெயராம். #மருத்துவபாரதி

*

நேற்று தீபாவளி வாழ்த்துச் சொல்ல பதிப்பாளரின் அலுவலகத்திற்குச் சென்றால் "பிரதி தீபாவளி விடுமுறை" என்று போர்டு மாட்டியிருக்கிறது.

*

மொழியியல் உண்மைகளை நோக்கிப் பக்கவாட்டில் நகரும் எனது எழுத்து.

*

"எப்படி இருக்கிறீர்கள்?" "பதில் சொல்ல அவகாசம் தாருங்கள்."

*

இளம் எழுத்தாளர்களே, "தொடர்ந்து எழுது" என்றால் "நிறைய எழுது" என்று பொருள். கவனம், கவனம்.

*

கல்வியா, செல்வமா, வீரமா? நிஜமாகவே கடினமான கேள்விதான். அறிவுத்தளத்தில் இருப்பவர்கள் ஏன் இதை அலட்சியப்படுத்துகிறார்கள் என்று தெரியவில்லை.

*

'ஜிஹாத் பதிப்பகம்' என ஒன்று வந்துள்ளது. முதல் புத்தகத்தை நான்தான் எழுதுகிறேன். அதன் தலைப்பு: 'காஃபிர்களை விட்டுவைப்பானேன்?'

*

நான்தான் பேயோன் என்று சொல்வதைவிட நான்தான் அந்தப் பெயரில் எழுதுகிறேன் என்று சொல்லலாம். க்ரியேட்டர் பாதி, க்ரியேச்சர் பாதி. ஹா!  #கமல்சார்

*

பால் தாக்கரேயின் தாமதச் சாவுக்கு மகிழ்பவர்கள் மனிதத்தன்மை அற்றவர்கள் மட்டுமல்ல, மறதிக்காரர்கள்கூட. ராஜ் தாக்கரேதான் இன்னும் இருக்கிறாரே.

*

இன்று தேசத்தில் கொழுந்துவிட்டெரியும் பிரச்சினைகளுக்கிடையே நம் சொந்தப் பிரச்சினைகளை யாரும் மறந்துவிட வேண்டாம்.

*

அஜ்மல் கசாப் அதிர்ஷ்டசாலி. குரூர குதூகலத்துடன் பல பேரைக் கொன்றவர் வெறும் நான்காண்டு சிறைவாசத்தை அனுபவித்துவிட்டுக் கண்ணை மூடிவிட்டார்.

*

"பெத்த கடனுக்குத்தான் என்ன வித்து வட்டியக் கட்டிப்புட்டா..." எவ்வளவு உருக்கமான வரி! ஒரு தாயின் நிதிநிலை!! #Nowlistening

*

இந்துத்வ சித்தாந்தத்தை சுருக்கமாக விளக்க 'ஹிந்து முந்துதல்' என்று சொல்லலாமா?

*

எனது இன்றைய ட்வீட்களால் யாருக்காவது மனம் புண்பட்டிருந்தால் யோசித்துப் பார்த்துத் திருந்துங்களய்யா!

*

மேன்மை தேங்கிய இந்திய அரசு கூகுளை எப்போது தடைசெய்யும் என அறிய ஆவல்.

*

நாளைக்கே ஆண்டவன் வாழ்க்கைக்கு நேரெதிரான இன்னொன்றைக் கண்டுபிடித்துக் கொடுத்தாலும்கூட அதுவும் வாழ்க்கை போலவே இருக்கும் என்பது என் ஊகம்.

*

குழந்தைகளை அடிக்கக் கூடாது.

*

மதியத்திலிருந்து தலைவலியாக இருந்தது. இப்போது தேவையில்லை.

*

தீங்கற்ற உண்மைகளைப் பேசுவது எளிதாக இருக்கிறது. "இதுல இருக்குறதுதான்" என்று மெனுவைக் காட்டி ஓட்டல் சர்வர் சொல்வாரே, அது போல.

*

"உன் பொட்டழிக்க ஒருத்தன் வராமயாபோவான்? என வில்லன் மனைவியிடம் ஒரு கிழவி சொல்கிறாள். அடுத்து ஹீரோ இன்ட்ரோ" என்றால் இயக்குநர் மறுக்கிறார்.

*

யாரும் படிக்காததை எப்படி எழுதினால் என்ன?

*

எல்லோரும் கருத்து சொல்லிக்கொண்டிருந்தால் வாழ்க்கையை ரசிக்க ஆளில்லாமல் போய்விடும்.

*

ஜாதிகள் இல்லையடி பா(ர்)ப்பா(ன்). #மீள்பாரதி

*

தலைவலியுடன் ஒப்பிட்டால் சாவு எவ்வளவு பெரிய விஷயம்! ஆனால் தனக்கு வந்தால் தெரிகிறதா?

*

நானே வாழ்த்துக்களும் அஞ்சலிகளுமாயிருக்கிறேன்.

*

ஒருவனுடைய வெண்ணெய் மற்றொருவனுக்குச் சுண்ணாம்பு.

*

இவர் இசை கேட்டால் புலி அசைந்தாடும். #ராஜாசார்

*

ஸ்பானிஷ்தான் ஐரோப்பாவின் தெலுங்கு.

*

என் ஜாதிக்காரர்களின் ஜாதிச் சங்கத்தில் புதிதாக சாதி மறுப்புப் பிரிவு தொடங்கப்பட்டுள்ளது. இப்படித்தான் காலத்திற்கேற்ப மாற வேண்டும்.

*

மோடி பிரதமரானால் இந்துக்களுக்குக் கூடுதல் lebensraum கிடைக்கக்கூடும்.

*

என் வாழ்க்கையில் எந்த நிகழ்விலிருந்தும் என்னால் இரண்டு வரிகளையாவது கறக்க முடிந்தால் அந்த நிகழ்வை அர்த்தமுள்ளதாகக் கருதுகிறேன்.

*

காந்தி சம்பந்தமாக ஒரு பிரச்சினை: அவர் இறந்துவிட்டார்.

*

செய்தித்தாள் படித்தால் நிறைய விஷயங்கள் தெரியாமலே போய்விடுகின்றன.

*

இளையராஜா இசையை ரசிக்க ஏதாவது சிறப்பு வழிமுறை இருக்கிறதா? பாதிப் பாடல்கள் ஆபாசம். மீதியோ பெண்களைக் கேவலப்படுத்துகின்றன.

*

கடந்த பல ஆண்டுகளாக என்னுடன் நட்பு கொண்டிருக்கிறாய் என்றால் நீயும் என் நண்பனே.

*

நம்மிடம் உள்ள ஒரே வெகுஜனக் கலை வடிவம் சினிமாதான். அதை உருப்படாத நிலையிலேயே வைத்திருங்கள், ஒழித்துவிடாதீர்கள்.

*

இன்று கற்ற வீட்டுப் பாடம்: சாப்பிட்டு முடித்த கையோடு "இன்றைக்கு என்ன சமையல்?" என்று கேட்காதே.

*

உன் டூத்பிரஷ்ஷால்/மீசையை வாரிக்கொள்கிறேன்.
#காதல்கவிதை

*

தென் சென்னை பேயோன் வாசகர் வட்டத்தில் ஒடிசலான இளம்பெண் ஒருவர் சேர்ந்திருக்கிறார். லபக்குதாஸ் அவரை Zero width joiner என்கிறார்.

*

கடைசியில் எல்லோருக்குமே ஆறடிதான் என்கிற பட்சத்தில் குள்ளமானவர்களால் நிறைய இடம் வீணாகிறது.

*

எக்ஸ்பிரஷனிசம் ஒருவித மினிமலிசம். மினிமலிசம் ஒருவித ரிடக்ஷனிசம்.

*

விமர்சனங்களைக் கையாள ஒரு நல்ல உத்தி, அவற்றைக் கருத்துகளாக பாவித்தல். 'அது அவர் கருத்து. நான் சொல்ல என்ன இருக்கிறது' என்று சமாளிக்கலாம்.

*

ஒரு நண்பர் என்னைப் பார்க்க வந்துவிட்டுத் தானே இடையறாது பேசிக்கொண்டிருக்கிறார். எனக்கு மட்டும் எதிர்பார்ப்புகள் இருக்காதா?

*

ஒன்றுமே புரியாதவர்கள் புரிகிற மாதிரிதான் எழுத முடியும்.

*

எனக்குக் கோபமே வராது. ஆனால் வண்டி வண்டியாய் வன்மம் இருக்கிறது.

*

கவிதை படிக்காதவர்களையும் பிறர் துணை கொண்டாவது கவிதை படிக்க வைத்தவர் அழ. வள்ளியப்பா.

*

Visionary = தூரதிருஷ்டசாலி. #மொழியாக்கம் #லபக்குதாஸ்

*

'மன நிம்மதி' என்பதை எழுத்துப் பிழையோடு 'மண நிம்மதி' என்று எழுதினால் கொடுமையான அபத்தமாகிவிடுகிறது.

*

பாட்டு கேட்காமல் இருந்தால் என்னவோ போல் இருக்கிறது. மின்விசிறியாவது சுற்றிக்கொண்டிருக்க வேண்டும் எனக்கு.

*

2013தான் புதிய 2012.

*

ஹாப்பி அண்டு பாஸ்பரஸாம். போன வருடப் பிறப்புக்கும் இதையேதான் சொன்னார்கள். அப்புறம் ஊரே பற்றி எரிந்தது.

*

நிமிர்ந்த நன்னடை மட்டும் போதாது, வேகமாகவும் நடக்க வேண்டும்.

*

நம்மை விமர்சிப்பவர்களை திட்டுவதைவிட நம் நிலையை விளக்குவதே மேலானதாக தோன்றுகிறது. ஆனால் நம் விளக்கம் இந்த மடையர்கள் மண்டையில் ஏற வேண்டுமே!

*

உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்,
"வளையோசை கலகலகலவென..." #ட்விட்டர்

*

மீசையை டிரிம் செய்து செய்து கடைசியில் மேலுதட்டைக் காணோம். இனிமேல் சாப்பாட்டைக்கூட தட்டச்சுதான் செய்ய முடியும் போல.

*

எல்லா பிரச்சினைகளுக்கும் வார்த்தை விளையாட்டுகள்தான் தீர்வு.

*

"ரகளையாக எழுதுகிறேன் பேர்வழி"கள்தான் அதிக பொருட்பிழைகளோடு எழுதுகிறார்கள்.

*

சில்வியா ப்ளாத் அழகாயில்லை என்றால் நமக்குத் தங்கை ஆகியிருப்பார்.

*

எந்தத் துறையிலும் 30 ஆண்டுகள் தங்கிவிட்டால் யாரும் லெஜண்டுதான். விமர்சனமெல்லாம் அப்புறம்.

*

பல்லாண்டு காலத்திற்குப் பின்பும் ஹிட்லர் மீதான தனிநபர் தாக்குதல் தொடர்கிறது.

*

பிரச்சினை. எனக்கு எழுதிக் கொடுப்பவர்கள் ஆபீஸ்

போட்டுத் தரச் சொல்கிறார்கள்.

*

இந்தியாவின் தலைநகரம் புதுதில்லி (சரியாகப் பேசுகிறேனா?).

*

நீ எனக்கு நண்பன் அல்ல எனில் பகைவனாவாய்; நீ எனக்குப் பகைவனாயின் நானுனக்குப் பயப்படச் சித்தமாயிருக்கின்றேன். - ஜூலியஸ் சீசர்

*

ஓட்டலில் "பூரி குடுங்க" என்றேன் சர்வரிடம். பிறகு மனம் மாறி, "இருப்பா, பூரி வேணாம், பரோட்டா குடு" என்றேன். #OldOrderChangeth

*

எத்தனை போராட்டங்களுக்கிடையே சும்மா இருக்கிறேன் தெரியுமா?

*

ஒரு வாசகர் மின்னஞ்சலில் அனுப்பிய பாராட்டுரை: P = Philosopher A = Artist Y = Yeoman O = Original N = Nobel (going to)

*

நேற்றுக் கனவில் ஓர் எண்ணம் உதித்து அலறியடித்துக்கொண்டு எழுந்தேன்: ஒருவேளை மற்றவர் பேச்சிலும் நியாயம் இருந்தால்?

*

மகன் ஐபேட், ஐபோன் என்று பழியாகக் கிடக்கிறான். "கொஞ்சமாவது டி.வி. பார்" என்று கெஞ்ச வேண்டியிருக்கிறது.

*

இணையத்தில் அரச குடும்பத்து வழித்தோன்றல்கள் அதிகமாக இருக்கிறார்கள். யாம், எமது, எம்முடைய என்று மிதப்பாக எழுதுகிறார்கள். எ.கா., "எமக்கு கையளிக்கப்பட்ட தேநீர் பெலம் குன்றியதாக உள்ளது."

*

"பொண்ணக் கூட்டிண்டு வாங்கோ!" என்று தூக்கத்தில் கத்தினேனாம். நாவல் எழுதுவதன் இயல்பு வாழ்கை பாதிப்புகள் இருக்கிறதே...

*

இந்திய பாலின விகிதம் குறித்து வருந்துவோர் அடையார் போய்ப் பாருங்கள். அங்கேதான் எல்லாப் பெண்களும் கொட்டிக் கிடக்கிறார்கள்.

*

"ஆஹாஹா ஆஹாஹா அரசன் சோப்பு..." இரண்டாவது

"ஆஹாஹா"வுக்கு ஆபோகியில் தளை தட்டுகிறது. ராஜாசார் கடவுள் என்று எவன் சொன்னான்?

*

என் விவகாரங்களில் குறுக்கிடாவிட்டால் நீயும் நல்லவனே.

*

திருக்கோவிலூர் தல புராணம் படித்தேன். மிகவும் பாதித்தது. அதன்பின் யாரைப் பார்த்தாலும் திருக்கோவிலூர் தல புராணம் மாதிரியே தெரிகிறார்கள்.

*

ஐ.பி.எல்.லில் சியர்லீடர்கள் என்கிற பெயரில் பெண்கள் ஆடுவதைப் பார்க்கும்போது நெஞ்சம் கொதிக்கிறது. கொஞ்சமாவது நளினம் வேண்டாம்?

*

ட்விட்டரில் என்னை 4700 சொச்சம் பேர் பின்தொடர்கிறார்கள். எனவே என் படைப்பு ஒன்றிற்குச் சுட்டி கொடுத்தால் 15 பேராவது படித்துவிடுகிறார்கள்.

*

வாசகர்களே, என்ன வெயில் இப்படிக் கொளுத்துகிறதே?
Sent from my iPad

*

இன்றைய சமூகத்தின் சகல அவலங்களுக்கும் யார் பொறுப்பு? சரி, கேள்வியைச் சற்று மாற்றிக் கேட்போம்: தமிழ்நாட்டில் இப்போதைக்கு மழை கிடையாதா?

*

நோபல் பரிசுகூட வேண்டாம். என் படைப்புகளில் ஆன்டி-செமிட்டிக் கருத்துகள் இருப்பதாக யாராவது வெளிநாட்டு பேராசிரியர்கள் எழுதினாலே போதும்.

*

எனக்குத் தெரிந்த விசயம் எதைப் பற்றியாவது எழுத வேண்டும் போல் கை துறுதுறுக்கிறது. இருபதாண்டுகள் ஆயிற்று.

*

கௌரவிக்கப்படாத காசோலை போல் தமிழ் எழுத்தாளனின் நிலை.

*

யாரோ திரைப்பட இயக்குநர் என் மனைவியின் கனவில் வந்து "இன்னும் எமோசனல் வேணும்" என்று சொல்லியிருப்பார் போல.

*

'தமிழின் ஆகச்சிறந்த ஒரு கோடி படைப்புகள்' என கறாராக ஒரு பட்டியல் தயாரித்தால் என்னுடைய பல படைப்புகள் அதில் தவறாமல் இடம்பெற்றுவிடும்.

*

வீட்டில் மின்சாரம் இல்லை, இணையம் இல்லை. வேர்களைத் தேடி...

*

ஒரு ஆயிரம் பக்க நாவலைத் தரவேற்றி ஃபேஸ்புக்கில் சுட்டி கொடுத்தால் கால் நொடியில் படித்து முடித்து லைக் போட்டுவிடுவார்கள் போல.

*

வாழ்க்கையில் எல்லாவற்றையும் அவற்றின் மேலோட்டமான மதிப்புகளைத் தாண்டி வெறும் செலவுகளாகப் பார்க்கும் பக்குவ நிலையை அடைந்துவிட்டேன்.

*

என் வலைதளத்தில் வரும் படைப்புகளை 30 பேரே படிக்கின்றனர். மிச்ச சில லட்சத்து சொச்சத்தினர் அவை தொகுப்பாக வெளிவர ஆவலோடு காத்திருக்கிறார்கள்.

*

'முதலினில் எழுதிடத் தொடங்கிவிடு! பின்பு நடப்பது நடக்கட்டும் துணிந்துவிடு!!' என்கிற என் கொள்கையைப் பலரும் கடைபிடிக்கிறார்கள் போல.

*

கட்டுரை, சிறுகதை, கவிதை என்று தனித்தனியாக சொல்கிறார்களே, என்ன விசயம்?

*

கவிதை எழுதுவதை நிறுத்தும் யோசனையில் உள்ளார் @labakdoss. அதை அவர் 'going legit' என்கிறார்.

*

தனக்கு நூறு ரூபாய் தர முடியுமா என்று கேட்கிறான் வாரி சு. இக்காலத்துக் குழந்தைகள் கேட்கும் கேள்விகளுக்கு நம்மிடம் பதில் இருப்பதில்லை.

*

தெலுங்கு டப்பிங் படத்திற்கு வசனம் எழுத வாய்ப்பு கிடைத்துள்ளது. பயிற்சிக்காக சில ஃபேஸ்புக் பக்கங்களைப் படித்துக்கொண்டிருக்கிறேன்.

*

வர்ணிக்க வார்த்தை இல்லை என்றால் போயேன் எங்கேயாவது.

*

ரொம்ப ஆசையாக எழுதுகிறேன், தயவுசெய்து படியுங்கள்.

*

மழை பெய்கிறது. விவஸ்தையற்ற காற்று அதை அலேக்காக அள்ளி ஊர் எல்லையில் போட முயல்கிறது. முட்டாள், முட்டாள், எங்களுக்கு மழை வேண்டுமடா!

காற்று இதைத் தைரியமாகவே செய்கிறது. போகிறபோக்கில் மதுபானக் கடை அருகே நின்றிருக்கும் லா என்போர்ஸ்மெண்ட் ஆளின் தொப்பியைத் தட்டி விடுகிறது.

*

மனைவியைத் துப்பாக்கியால் சுடுவதாகக் கெட்ட கனவு வந்தது. ஏன் கெட்ட கனவு என்றால் "No loose ends" என்று என்னையும் சுட்டுக்கொள்கிறேன்.

*

அத்திக்காய், ஆலங்காய் என்பது போல நட்புக்காய், சேமிப்புக்காய் என்று எழுதுகிறார்கள்.

*

இன்னொரு துக்கடா விருது கிடைத்துள்ளது. தங்கநிறம் பூசிய பிளாஸ்டிக் கிரீடம். மிகச் சிறிதாக இருப்பதால் மோதிரமாக அணிந்துகொண்டிருக்கிறேன்.

*

"துரோகங்கள்" என்ற வார்த்தையைப் பயன்படுத்திக் கவிதை எழுதும்போது ஜாலியாக இருக்கிறது.

*

கர்நாடக இசையில் 'நடு மத்யமம்' என ஒன்று நிஜமாகவே உள்ளதா, அல்லது வெறுமனே என் கற்பனைக் குதிரையின் குளம்பொலியா?

*

மேல் திருப்பதி, கீழ் திருப்பதி இருப்பது போல் கர்நாடக இசையிலும் மேல், கீழ் ஷட்ஜமம் உள்ளது போல. கிருதாகூட உண்டாம். பாகவதருடையதோ?

*

வாசகர்களே, போலீஸ் வருகிறது, ஓடுங்கள்!!!

*

நான் கிரவுட் புல்லன் அல்லன். இலக்கியத் தரமாகத்தான் எழுதுவேன்.

*

வர வர வெயில் தனிப்பட்ட தாக்குதலாகிவருகிறது.

*

மோப்பக் குழையும் உன் வீட்டு நாய் மணிக்கு நாப்பதில் என்னைத் துரத்தும். #காதல்குறள்

*

இவ்வளவு எழுதுகிறேனே, யாராவது படிக்கக் கூடாதா?

*

இன்று ஒரு கோரமான காட்சியைப் பார்த்தேன். பெற்ற தாயே தன் குழந்தையை நடுத்தெருவில் போட்டுத் தெலுங்கில் கொஞ்சுகிறாள்!

*

'சுந்தரத் தெலுங்கு' என்று பாரதியார் சொன்னார்தான். ஆனால் "எல்லோரும் இந்நாட்டு மன்னர்" என்றும் அவர்தான் சொன்னார்!

*

ஓநாய்களுக்கும் ஒட்டாண்டிகளுக்கும் மத்தியில்தான் வாழ வேண்டியிருக்கிறது.

*

"ரவைக்குள்ள கட்டுரைய எழுதி அனுப்பிடுங்க" என்கிறார் பத்திரிகை ஆசிரியர். ஜப்பானியர்களால்கூட முடியாது.

*

"கவித கவித" என்றால் "இதில் என்ன எழுதியிருக்கிறது என்று படித்துப் பார்த்து அர்த்தம் சொல்லுங்களேன்" என்று பொருள்.

*

"எந்தன் மூச்சை நிறுத்திவிடு" கொஞ்சம் அதிகப்படியான தண்டனையாகத் தெரிகிறது. "எந்தன் மீசை எடுத்துவிடு"

நியாயமாகப் படுகிறது. #மீள்பாரதி

*

எனது நூல்களில் "Do not iron on printed area" ஸ்டிக்கர் ஒட்டுமாறு நூலக ஆணையத்திடம் கேட்டிருக்கிறேன். சில வாசகர்களுக்கு தலை கால் புரிவதில்லை.

*

கோணங்கியின் 'பிதிரா பினிதமா?' இப்போதும் கடைகளில் கிடைக்கிறதா?

*

தமிழ்நாட்டையும் தமிழ், நாடு என இரண்டாகப் பிரிக்கலாம். தமிழ்ப் பற்றாளர்கள் தமிழிலும் தேசபக்தர்கள் நாட்டிலும் இருக்கலாம்.

*

"நாளைக்குத்தானே வருகிறார்கள் உன் அப்பா-அம்மா?" "..." "இல்லை, இப்போதுதானே வந்துவிட்டுப் போனார்கள், அதற்காகக் கேட்கிறேன்."

*

Hairdresser's = சிரைச்சாலை #மொழியாக்கம் #லபக்குதாஸ்

*

எனது "3024இல் எதுவும் சாத்தியம்" அறிவியல் புனைவைப் படித்துவிட்டு ஒருவர் அந்த ஆண்டு இன்னும் வரவேயில்லை என மின்னஞ்சல் அனுப்பியுள்ளார்.

*

நியூயார்க்கரில் பத்தி எழுதும்படி என்னைக் கேட்டிருக்கிறார்கள். ஆனால் கேட்டவர்கள் பக்கத்துத் தெரு வாசகர்கள் என்பதால் பத்தி ஏதும் வராது.

*

தற்போது கேட்பது "தானா வந்த சம்பளமே..." அருமை! (இளையான்குடி ராஜமாணிக்கம் என்றால் பெரிதாக உள்ளது. பிறர் போல் இளையராஜா என சுருக்குகிறேன்)

*

எனது மின்னஞ்சல் கடவுச்சொல்லை மாற்றிய பின்பு என் மின்னஞ்சல்களைப் படித்து என் சார்பாக பதிலிடுபவர்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துள்ளது.

*

நம்பர் நோட் பண்ணி வைத்து கால் கட் பண்ணுகிறார்கள்!

*

நூலகத்தில் ஒரு கவிதைத் தொகுப்பு எடுத்தேன். ஒவ்வொரு கவிதைக்கும் ஓரத்தில் நோ, முடில, விட்டுடு, இப்பவாவது?

என பலவாறாக எழுதிக்கொண்டிருக்கிறேன்.

*

இளையான்குடி ராஜமாணிக்கம் சார் தம் திரையிசையில் பயன்படுத்திய அத்தனை கருவிகளைப் பற்றியும் இங்கு தகவல்கள் உள்ளன - bit.ly/4f0TzR

*

வெளியே கிளம்பும்போது "வர்றப்ப அரைக் கிலோ அரிசி வாங்கிட்டு வருவீங்களா?" என்று கேட்டால் எனக்கென்ன ஜோசியமா தெரியும்?

*

அமெரிக்காவிலிருந்து மைத்துநர் வாங்கி வந்த ரொட்டியின் சுவை பற்றி லபக்குதாஸ் ஃபோனில் தாங்கொணாப் பெருமிதம். #பாண்இன்தயூஎஸ்ஏ

*

நண்பர் ஒருவர் சீன ஓவியத்திலிருந்து விண்வெளிப் பயணம் வரை எது பற்றிப் பேசினாலும் "எல்லாம் ஃப்ராடு பசங்க" என்றே முடிக்கிறார்.

*

ஃபேஸ்புக்கில் அறிந்த அதிர்ச்சித் தகவல்: சூரியனுக்கு மஞ்சள் நிறம் தரப் பயன்படுத்தப்படும் சாயத்தில் ஆபத்தான வேதிப்பொருட்கள் உள்ளனவாம்.

*

இதென்னப்பா திடீர் மவுசு? வழக்கமாக என் வலைத்தளத்திற்கு தினமும் 22 பேர்தான் வருவார்கள். இன்று 23 பேர் வந்திருக்கிறார்கள்.

*

லபக்குதாஸ் எனக்கு மின்னஞ்சல் அனுப்பியுள்ளார். அதை நான் பார்த்தேனா என்று அறிய "Did you get my drift?" என குறுஞ்செய்தி அனுப்புகிறார்.

*

ஆசையே நம்பிக்கைக்குக் காரணம்.

*

சமீபத்தில் ஒரு விசயம் என்னை மிகவும் யோசிக்கவைத்தது: என் மூளை.

*

'முன்மாதிரியாக இரு' என்று மகனுக்குத் தொடர்ந்து போதித்தாலும் பயல் வெறும் குஜராத் முன்மாதிரியாகக் கிடக்கிறான்.

*

நெருங்கிய உறவினர் திட்டுகிறார். நான் என்ன செய்ய? ஒரு மிருதங்கம் இருந்தால் ஆத்திரமாக வாசித்துக்கொண்டிருக்கலாம். கேபிசார் விஞ்ஞானி.

*

*எதற்கு மாய்ந்து மாய்ந்து காமெடிப் படம் எடுக்கிறார்கள்? சிரிக்கவைக்க நாமென்ன குழந்தைகளா?*

*

*ரூபாயின் மதிப்பு எந்தன் நெஞ்சில் எப்போதும் உயர்ந்தே இருக்கும்.*

*

*மதம் என்னும் பெயரில் சாமி கும்பிடுகிறார்கள்.*

*

*'தெரிந்துகொள்ளப்பட்டுவிட்டது' என்பதை நான்கு தனிச் சொற்களாக எழுதிவிட்டுக் குழந்தை மாதிரி சிரிக்கிறார்கள்.*

*

*எங்கள் வீட்டில் எல்லாமே சாம்சங்தான். :-)*

*

*கடவுள் இல்லை என்பவர்கள் உலகம் எப்படி கச்சிதமான உருண்டையாக உருவானது என்று சொல்ல வேண்டும். அறிவியல் ரீதியான விளக்கம் இருந்தால் வேண்டாம்.*

*

நண்பர் லபக்குதாஸ் 'தீவனம்' என்ற பெயரில் சிற்றிதழ் தொடங்குகிறார். அது கால்நடை வளர்ப்பு பற்றி இல்லையாம். நெருப்புக் காடு என்று பொருளாம்.

*

மன்னிக்கவும், ஒரு வருசத்தில் எத்தனை நிமிசம்?

*

"ஒரு வருசத்தில் எத்தனை நிமிசம்?" என்ற என் கேள்விக்குப் பல விசயஞானிகள் பதிலளித்ததில் சந்தோசம்.

*

உலகிலேயே பெரிய கிரகம் பூமிதான்.

*

நேர்காணலை "செவ்வி" என விநோதமாகச் சொல்கிறார்கள். எங்கள் ஊரில் வன்முறையைத்தான் அப்படிச் சொல்வோம். "நல்லா கட்டிப்போட்டு செவ்விச் செவ்வி..."

*

சிரித்து மாள வேண்டும்; பிறர் சிரிக்க மாண்டிடாதே.

*

மயக்கம்தான், கலக்கம்தான், மனதிலே குழப்பம்தான்,

வாழ்க்கையில் நடுக்கம்தான்.

*

என்னைப் பொறுத்த வரை விவாகரத்துதான் சீர்திருத்தத் திருமணம்.

*

மொட்டையாக "சொந்தக்காரர்கள்" என்று எழுதாமல் "சொந்தங்கள்" என அஃறிணையில் எழுதினால் மனம் நெகிழ்ந்து விம்முகிறது.

*

இந்த நரேந்திர மோசடி நம் தேசத்தில் பல முக்கியமான ஏமாற்றங்களைக் கொண்டுவருவார் என்று சொல்லப்படுகிறது.

*

எனது பயணக் கட்டுரைகள், 'இருக்கக்கூடிய இந்தியா' என்ற தலைப்பில் தொகுப்பாக வருகின்றன.

*

ஏதோ ஒரு பட்சியின் சிறகில் ஏறி மேகங்களில் மிதந்து வானவில்லில் குதித்து வண்ணங்களில் திளைக்க ஆசை. ஆனால் முடியவே முடியாதே!!!

*

"சிறுகதைதானே? ஆல்மோஸ்ட் எழுதிட்டேன். லேயரிங்-க்கு குடுத்திருக்கேன். நாளைக்கு அனுப்பிடறனே."

*

இப்போதெல்லாம் 'நல்லவர்கள்' என்று தனியாக யாரும் இல்லை. எல்லோருமே நல்லவர்கள்தாம்.

*

முழுநேர எழுத்தாளர்களுக்குத் தூக்கம் மரியாதைக்குரிய எதிரி.

*

காலை நேரம் இணையத்தில் உலாவும்போது கவிதை ஏதேனும் கண்ணில் பட்டால் மனம் இசங்களைத் தேடுவதில்லை. "காலையிலேயேவா?" என்றுதான் தோன்றுகிறது.

*

நான் வெகு நல்லவன். வன்மம், சுயநலம், பொறாமை, குயுக்தி எல்லாம் இருப்பதால் வேறு மாதிரியாகத் தெரிவேன், அவ்வளவுதான்.

*

#NowListening காற்று வெளியிடைக் கண்ணம்மா, உன் மன சுக்குள்ளே என்னம்மா...

*

"ஓ, ரில்கே எல்லாம் படிப்பீங்களா? அப்புறம் ஏன் உங்க கவிதை இப்படிக் கெடக்கு?"

*

கடவுள் நம்பிக்கை ஒரு பசித்த கிணறு. பூஜை, பரிகாரம் என்று அதற்குத் தீனி போட்டுக்கொண்டே இருக்க வேண்டும்.

*

நேற்று என் பெயருக்குக் கூரியர் வந்தது எனக்கு மட்டும்தானா?

*

சில ராஜா ரசிகர்களைப் பொறுத்த வரை காஜல் அகர்வாலைவிட ராஜாசார்தான் அழகு.

*

வாசகர் நீட்டிய என் புத்தகத்தில் கையொப்பம் என்ன, சிறுகதையே தருகிறேன் என்று தொடங்கியவன் கூடுதல் தாள் வேறு வாங்கி எழுதிக்கொண்டிருக்கிறேன்.

*

ஓவியர் பிகாசோவின் Les Demoiselles d'Avignon - ஒரு தடவை பார்க்கலாம்.

*

கவிதை எழுதி ஐந்து நிமிசம் ஆகிவிட்டது. இப்படியே போய்க்கொண்டிருந்தால் இன்னும் ஐந்து நிமிசத்துக்குக் கவிதை இல்லாமல் போய்விடும்.

*

மனிதனுக்கு சோதனை எந்தெந்த வடிவங்களில் எல்லாம் வருகிறது பாருங்கள். கையில் இருக்கும் சார்ஜர் நழுவிக் கீழே விழுந்துவிட்டது.

*

எதிர்த் தரப்பு உறவினர்கள் வீட்டுக்கு வந்தால் உடனே கிளம்பிவிடுகிறார்கள். முழுசாக மூன்று மாதம்கூடத் தங்குவதில்லை.

*

"எல்லாவற்றையும் ஆண்டவன் பார்த்துக்கொண்டிருக்கிறான்" என்று யாராவது சபிப்பதைக் கேட்டால் சிரிப்பு வருகிறது. அவன் வேலையே அதுதானே.

*

பிளிப்கார்ட்டில் போன வாரம் ஆணையிட்ட புத்தகம் இன்னும் வரவில்லை. தம்பிகளா, எனக்கு புத்தகம்கூட வேண்டாம். வந்து காசாவது வாங்கிக்கொண்டு போங்கள்.

*

சும்மா இருக்கிற நேரத்தில் 'போரும் அமைதியும்' போல் எதையாவது எழுதிவைக்கலாம்.

*

"பழைய நினைவுகளைக் கிளறிவிட்டீர்கள்!!" என்னவோ உலகமகா குற்றச்சாட்டு போல் எழுதுகிறார்கள்.

*

"பழைய நினைவுகளைக் கிளறிவிட்டீர்கள்!!" - நீ மட்டும் உத்தமனா?

*

நமக்கு இனிப்பான கருத்தை நம் எதிரியே சொன்னாலும் அதைத் திறந்த மனதுடன் ஏற்கும் பெருந்தன்மை வேண்டும்.

*

காதில் விழுந்த தகவல்: விண்வெளியிலிருந்து பார்த்தால் மாமலையும் ஓர் கடுகாம்.

*

மணி ஆறேமுக்கால்தான் ஆகிறது. அதற்குள் ஏழு மணி போல் ஒரு இருட்டு.

*

எழுத்தாளன் வளர்கையில் வாசகர்களும் சேர்ந்து வளர

வேண்டும். பழையதையே எதிர்பார்த்து "ரைம்ஸ் சொல்லு" என்கிற ரீதியில் அவனிடம் பேசக் கூடாது.

*

வாசகர்கள் செலவில் அமெரிக்காவை சுற்றிப் பார்த்துவிட்டு 'ஆஹா அமெரிக்கா!' என ஒரு புத்தகம் எழுத ஆசை. இதே வரிசையில் 'அடேங்கப்பா ஐரோப்பா!'

*

மென்மையாகச் சிரிக்கக் கற்றுத்தர கோர்ஸ் இருக்கிறதா? எழுத்தாளனுக்கு 50 வயதினுள் இதெல்லாம் செய்ய வர வேண்டும் என்கிறார் லபக்குதாஸ்.

*

அடுத்த வாரம் மகிழ்ச்சியில் இருப்பேன். மகிழ்ச்சியில் இருக்கும் வாசகர்கள் என்னைப் பார்க்க வரலாம்.

*

அருமையான கிரிக்கெட் மட்டையை வைத்துக்கொண்டு வெறும் பிளாஸ்டிக் பந்தை அடித்து ஆடுவது போலுள்ளது சில சமயங்களில் எழுதுவது.

*

கீழ் வீட்டில் தெலுங்கர்கள் இருப்பதாலோ என்னவோ, எப்போதும் எங்கிருந்தோ தெலுங்குப் பாட்டு ஒலித்துக்கொண்டிருக்கிறது.

*

உரையாடல்களைப் பொறுத்த வரை எனக்கும் என் மனைவிக்கும் இடையிலான உறவு, எனக்கும் என்னைப் படிப்பவர்களுக்கும் இடைப்பட்ட உறவு போன்றது. மனைவி என்னிடம் பேசிக்கொண்டிருக்கும்போது “சீக்கிரம் முடி, சீக்கிரம் முடி” என்று மனம் கிடந்து அடித்துக்கொள்ளும்.

*

டிரமாட்டிக் மோனலாகு

சேச்சே, அப்படியெல்லாம் இல்லை. ‘விமர்சிக்க’க் கூடாது என்று சொல்வேனா? உங்களைப் போன்ற மெத்தப் படித்தவர்கள் என்னை விமர்சிக்க வேண்டாம் என்று வேண்டுகோளாகக்கூட சொல்ல மாட்டேன். டெலிபோன் டைரக்டரி, பயணச் சீட்டுகள். திரையரங்குக் கட்டணச் சீட்டுகள், கடைப் பெயர்கள், சான்றிதழ்கள், லேபிள்கள், விளம்பரங்கள், லாட்டரிச் சீட்டு எண்கள், பாக்கெட் நாவல், கும்மி கூச்சல் வலைப்பதிவுகள், ஆர்க்குட் ட்விட்டர் ஃபேஸ்புக் கூகுள் பிளஸ் மொக்கைகள், வம்புகள், பத்திரிகைத் துணுக்குகள், திருகல்மொழிப் பகட்டுக் கவிதைகள், அதிர்ச்சி மதிப்புக்கான morbid படிமக் குவியல் உரைவெட்டுகள், மின்னஞ்சல் பார்வர்டுகள், பிரபலத் தொடர்கதைகள், அஜால் குஜால் மேட்டர்கள், எஜமானோர் அருளிய படைப்புகள், பத்திரிகைக் கேள்வி-பதில்கள், இலத்தீன் அமெரிக்க பாதிப்பு நகல்கள் மற்றும் மொழியின் பயன்பாட்டிற்கு அதிக வேலை இல்லாத பிற பனுவல்கள் போக வேறு எதையாவது கொஞ்சம் படித்துவிட்டு/எழுதிவிட்டு வந்து விமர்சியுங்களேன்

என்கிறேன். அதே மாதிரி ஈகோ, ஈகோ என்று ஒருமுறை மட்டும் சொல்வார்களே, அதை அழுக்கு பனியன் போல் கழற்றிவைத்துவிட்டுப் படியுங்கள். நிரம்பவும் உரிமை எடுத்துக்கொண்டு அநியாயத்திற்கு அதிகமாகக் கேட்டுவிட்டேனோ? அப்படியெல்லாம் ஒன்றுமில்லையே? ஐயோ, சார், எனக்கென்ன கோபம்? நீங்கள் ஏதோ மனசில் பட்டதை நேர்மையாகச் சொன்னீர்கள். அதற்கு நானும் என்னால் முடிந்த வரை நேர்மையாக பதில் சொன்னேன், அவ்வளவுதான். உங்களைப் புரிந்துகொள்ள ஒரு முயற்சி மேற்கொண்டேன், அவ்வளவுதான். பாருங்கள், இரண்டு 'அவ்வளவுதான்' வருகிறது...

*

தொலைபேசியில் அழைப்பவர்கள் எது பற்றிப் பேசப்போகிறீர்கள் என்பதை அழைப்புக்கான 'சப்ஜெக்ட் லைன்' போல முன்கூட்டியே குறுஞ்செய்தி அனுப்பினால் பேசவா வேண்டாமா என்று நான் முடிவுசெய்ய வசதியாக இருக்கும், நன்றி.

*

எனக்கு இணையத்தில் போலிகள் உருவாகியிருப்பது பற்றி என் ரசிகர்கள் வேதனை அடைந்திருக்கிறார்கள். ஒண்ட வந்த பிடாரிகள் ஊர்ப் பிடாரியை விரட்டிவிடுமோ என்று ஒருவர் கேட்டிருக்கிறார். அந்தக் கவலையே தேவையில்லை.

*

என் மகன் தன் தாயிடம் திட்டு வாங்கும்போது காதைப் பொத்திக்கொள்கிறேன். புல்லுக்கும் ஆங்கே அல்லவா பொசிகிறது.

*

"ஏங்க, இந்த சனி ஞாயிறு எங்கம்மா வீட்டுக்குப் போலாம்ங்க." "போகலாம், ஆனா அங்க உங்கம்மா இருப்பாங்களே!" ஜோக் எழுத ஆரம்பிக்கலாம் போல.

*

மின்வெட்டு ஏற்படும்போது சும்மாதான் இருக்கிறேன் என்பதால் நிறைய பெண் பேச்சு கேட்க வேண்டியிருக்கிறது.

*

ஒரு முஸ்லிம் கணவனின் மனநிலையைத் துல்லியமாகப் பாடுகிறார் பாரதியார்: பேகத்தைக் கொன்றுவிடு, அல்லா எந்தன் மூச்சை நிறுத்திவிடு.

*

"உருவத்தைக் காட்டிடும் கண்ணாடி/உலகத்தை வைத்தது என் முன்னாடி" - diglossia.

*

"I do appreciate you being round." பீட்டில்ஸின் இந்த வரியை எந்தக் கணவனும் தனது குண்டான மனைவியிடம் சொல்ல மாட்டான்.

*

மெத்த இலக்கியம் படித்த அன்பர் ஒருவர் பெண்களுக்கு ஆபாசக் குறுஞ்செய்திகள் அனுப்புகிறார். அதே சமயத்தில் பெண்கள் மீதான பாலியல் வன்முறையை எதிர்த்துப் பொதுவெளியில் முழக்கமிடுகிறார். இலக்கியம் மனதை விசாலப்படுத்துகிறது என்கிறோம். ஆனால் சிலருக்கு அது மிகவும் குறுகலாகவே விசாலப்படுத்துகிறது.

*

இன்னும் ஒரு திருமணம் செய்துகொள்ளும்படி பெற்றோரும் மனைவியும் என்னை வற்புறுத்துகிறார்கள். ஒரு திருமணத்தால் எனக்கு புத்தி வரவில்லையாம். அதனால்தானாம். கூடுதல் புத்தி கிடைக்கும் என்றால் சொந்த உபயோகத்திற்கு நல்லதே. வந்த சரஸ்வதியை விடுவானேன் என்று நாணிக் கோணி சம்மதம் தெரிவித்தால் அவர்கள் சொன்னது கிண்டலுக்காம். இதுதான் இவர்களிடம்.

*

ஆண்டுகளின் வரிசையில் இது 2013இன் முறை. இதற்கு முன்பு 2012, 2011 என்று சிறிய கடந்தகால எண்களாக வந்தன. இனி 2014, 2015 என்று பெரிய எதிர்கால எண்களாக இருக்கும். வேறு விசேஷம் இல்லை.

*

மழை வரும் போல் தெரிந்ததால் வெளியே செல்லும்போது குடையை எடுத்துக்கொண்ட நான், குடை

எடுத்துக்கொண்டு போகும் சமயங்களில் மழை வருவதில்லை என்பது நினைவிற்கு வந்து குடையை வைத்துவிட்டு வெறுங்கையோடு கிளம்பியதால் மழையில் நன்றாக நனைந்துவிட்டேன்.

*

என் இலங்கைத் தமிழ் நண்பர் ஒருவருக்குத் தேதி என்று சொல்ல வராது. திகதி, திகதி என்பார். "உந்தத் திகதியிலை..." என்பார். "அதெப்படிய்யா, திகதியை ஒரு இலை மேல குந்த வெச்சு உந்துவீரா?" என்பேன் நான். என்னுடைய நச்சரிப்பு தாங்காமல் 'திவஸ்யம்' என்று மாற்றிச் சொல்ல ஆரம்பித்தார். நான் அதற்கும் "திவசமா? யாருக்கு?" என்று கேட்பேன். அடுத்து என்னுடன் தமிழில் பேசுவதையே நிறுத்திவிட்டு சரளமான ஆங்கிலத்தில் பேசத் தொடங்கினார். இப்போது அவர் மட்டுமே பேசுகிறார். நான் வெறும் 'ஐ ஸீ', 'இஸ் இட்', 'வெல்கம் டு தி ஃபோன் கால்'தான்.

*

பெண்கள் மது அருந்துவதைக் காட்டுவதற்காகவே திரைப்படங்கள் எடுக்கப்பட வேண்டும். இந்தப் படங்களில் பெண்கள் மட்டுமே நடிக்க வேண்டும். அல்லது ஆண்களும் நடிக்கலாம், ஆனால் அவர்கள் மது பரிமாறுபவர்களாக மட்டுமே தலைகாட்ட வேண்டும். படத்தில் கதை-வசனம் இருந்தால் பரவாயில்லை. அவை சுவாரசியத்திற்குப் பயன்படும், படம் அதிகம் பேரைச் சென்றடைய உதவும். உண்மையில் இப்படியான படங்கள் வாரந்தோறும் எடுக்கப்பட்டுத் திரையரங்குகளிலும் டி.டி.ஹெச்.சிலும் வெளியிடப்பட்டுக்கொண்டிருக்க

வேண்டும். ஒரு படத்தை சில லட்சம் ரூபாய்களில் எடுத்துவிடலாம். இது சமூகத்திற்கு மிக அவசியமான செலவாகும். இந்து மக்கள் கட்சியை வெறுப்பேற்றுவதன் முக்கியத்துவம் குறைத்து மதிப்பிடப்படக் கூடாதது.

*

ஒரு வாசகர் ‘ஒரு லோட்டா இரத்த’த்தைப் பத்து முறை படித்தாராம். ஒவ்வொரு முறையும் பிரெஷ்ஷாக இருந்ததாம். நேற்று ஒரே ஆள் பத்து பிரதி வாங்கியதாகச் சொன்னார்கள். இவராகத்தான் இருக்கும்.

*

ஹாலிவுட் நடிகர்கள் ஆஸ்கர் விருது பெற மேடை ஏறும்போது அவர்கள் நடித்த திரைப்படத்திலிருந்து இசையை ஓட விடுவது போல, நான் விருது பெற எழும்போது சில வாசகர்கள் என் புத்தகங்களிலிருந்து ஏதாவது படைப்பை வாசித்தால் நன்றாக இருக்கும்.

*

ஃபேஸ்புக் (முகநூல்) நட்புக் கோரிக்கைப் பட்டியலில் சுமார் நூறு பேர் கிடக்கிறார்கள். நான் கண்டுகொள்வதில்லை. தெரியாத ஆட்களை நண்பராகச் சேர்த்தால் பிறகு ஏதாவது இடுகைக்கு வெட்டுவேன், குத்துவேன், ஆட்டோ அனுப்புவேன் என்று பின்னூட்டமிட்டு மிரட்டுவார்கள். ஒருமுறை ஆட்டோ வரவும் செய்தது. வேலையெல்லாம் முடிந்த பின்பு ஆட்டோக்காரர் என்னிடமே காசு கேட்டார். அதுகூடப் பரவாயில்லை, எண்பது ரூபாய்

எடுத்துக்கொள்வதற்கானவர் நூறு ரூபாய்க்குச் சில்லறை இல்லை என்று சில்லறை மாற்றித் தருவதாக தன் சீட்டின் ஓரத்திலேயே அபாயகரமாக அமர்த்தி பெட்ரோல் பங்க்கிற்கு அழைத்துச் சென்று சில்லறை மாற்றி இருபது ரூபாய் பாக்கி தந்துவிட்டு வீட்டிலிருந்து மூன்று கிலோமீட்டர் தூரத்தில் அங்கேயே அம்போ என்று விட்டுவிட்டுச் சென்ற கொலைக் கொடுமையை என்னவென்று சொல்ல?

*

நகைச்சுவை எழுத்தாளர் பி.ஜி. உட்ஹவுஸ் நாட்டு நடப்புகளைத் தவறாமல் கவனித்துவருவாராம். அப்படியும் அவரால் தொடர்ந்து நகைச்சுவையாக எழுத முடிந்தது என்றால் அவரது மனநிலையை பாதிக்காத அளவிற்கு அந்தக் காலத்திய நிகழ்வுகள் ஒப்பீட்டளவில் குரூரங்குறைந்தவையாக இருந்திருக்கக்கூடும். அவரோ இரண்டு உலகப் போர்களையும் பல சிறு போர்களையும் பல படுகொலைகளையும் நிகழ்ந்த காலத்தில் பார்த்து வாழ்ந்தவர். எனவே அவர் மனிதநேய காலம் எதிலும் வாழவில்லை என்பதுறுதி. பிறகெப்படி அவரால் தம் தொழிலைச் சிறப்பாகச் செய்ய முடிந்தது? தம் கலை மீது அவருக்கிருந்த சமரசமற்ற, பிடிவாதமான காதல்தான் காரணமாக இருக்கும். அவர் எவ்வளவு கல்நெஞ்சக்காரராக இருந்திருந்தால் இவ்வளவு அழகாக எழுத முடிந்திருக்கும்!

*

எனது தெருமுனை டிபார்ட்மெண்டல் ஸ்டோர்காரருக்கு நான் என்ன மளிகைச் சாமான்கள் வாங்குகிறேன், எதற்கு

என்ன மருந்துகள் வாங்குகிறேன் என்பதெல்லாம் தெரியும். இப்போது அவர் இந்தத் தகவல்களை கூகுளுக்கு விற்கப்போவதாக மிரட்டுகிறார்.

*

முதல் கல்

"உங்களில் பாவமே செய்யாதவர் முதல் கல்லை எறியுங்கள்" என்று அகிம்சாவாதியான யேசு பெயரளவில்கூட சொல்லியிருக்க மாட்டார். பாவம் செய்யாதவர் தப்பித் தவறி யாராவது ஒருவர் இருந்து தொலைத்தாலும் ஒரு தன்னடக்கத்திற்காகக் கல்லெறியக்கூடும். அதைப் பிள்ளையார் சுழியாகக் கொண்டு எல்லோரும் ‘தர்ம எறி’யாக மகதலேனா மீது கல் மழை பொழிந்திருப்பார்கள்.

இந்த அபாயகரமான நிகழ்தகவு யேசுவின் மனதிற்குக் கண்டிப்பாகப் பட்டிருக்கும். எனவே, “நிறுத்துங்கள், நீங்களெல்லாம் மட்டும் ரொம்ப ஒழுங்கா? எல்லோரும் வீட்டுக்குப் போங்கள்” என்றுதான் சொல்லியிருப்பார்.

உண்மையில் எல்லோருமே முதல் கல்லை எறிய முயன்றிருப்பார்கள். ஏனென்றால் தங்களைக் பாவம் செய்யாதவர்களாகக் காட்டிக்கொள்ளக் கிடைக்கும் வாய்ப்பினை யார்தான் தவற விடுவார்கள்? யேசு புண்ணியத்தில் மகதலேனாவுக்கு நிச்சயமாகக் கல்லடி கிடைத்திருக்கும்.

*

மார்க்வெசின் One Hundred Years of Solitude தமிழில் வருகிறதாம். பாவம் லபக்குதாஸ். தொண்ணூறுகளிலேயே அதை ‘தனித்த ஆண்டுகள் ஒரு நூறு’ என மொழிபெயர்த்துவிட்டுப் பொருத்தமான பதிப்பாளருக்காய் காத்திருக்கிறார்,

*

என் கண்ணெதிரே ஓர் அநீதி நடக்கும்போது நெஞ்சம் இப்படிக் கொந்தளிப்பதுண்டு: “இந்த இழவெல்லாம் என் கண்ணெதிரேதான் நடக்க வேண்டுமா? நான் போன பின்பு நடந்தால் என்ன கெட்டுப்போய்விடும்? பேப்பரில், டி.வி.யில் பார்ப்பது போதாதா? நேரில் வேறு பார்க்க வேண்டுமா? எனக்கென்று உணர்வுகள் இருக்காதா? இந்தக் கருமத்தையெல்லாம் ஓர் அவசரத்தில் மறக்க முடியுமா? பிறர் பார்க்க இதென்ன அம்மணக்கட்டை டான்சா? போங்களய்யா, நீங்களும் உங்கள் அநீதியும்! சுத்தமாகப் பிடிக்கவில்லை!!!”

*

ஆட்டோ டிரைவரிடம்…

"அவனவன் இங்கேந்து ஜெமினி போக 180 ருவா வாங்குறான். நீங்க மட்டும் நேர்மையா 100 ருவா வாங்காம 150 வாங்குறீங்களே, கட்டுப்படியாகுதா?"

"சார்?"

சுட்டிகள்

www.writerpayon.com

twitter.com/ThePayon

writerpayon.tumblr.com

*